# அரசு ஊழியர்

நவம்பர் 2020

மலர் : 41 இதழ் : 11

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ.100 தனி இதழ் ரூ.10*


## சூடா ஒரு கோப்பை சூப்

## மனிதனென்றால்...

**“பேசும் பாரென் கிளி”யென்றான்**
**கூண்டைக் காட்டி.**

**வாலில்லை,**
**வீசிப் பறக்க சிறகில்லை,**
**வானம் கைப்பட வழியில்லை.**

**“பேசும், இப்போது பேசும்” என**
**மீண்டும் மீண்டும் அவன் சொல்ல...**

**“பறவையென்றால்**
**பறப்பதெனும் பாடம்**
**முதலில் படி” என்றேன்.**

\- *கல்யாண்ஜி*



தலைவர் மடல்

# நம் உரிமைகளை... நாட்டு மக்கள் உணர்வுகளை... மதிக்கத் தெரிந்த மக்களாட்சியை மலரச் செய்வோம்!

## ஜனநாயகமற்ற இந்தியாவை உருவாக்கும் முயற்சிகள்

“சமூக, பொருளாதார சமத்துவம் இல்லையெனில் இந்தியாவில் ஜனநாயகம் என்பது மிக மிக மேலோட்டமான ஒன்றாகவே இருக்கும். அது ஜனநாயக மறுதலிப்புக்குச் சமமானது.” என்றார் டாக்டர் அம்பேத்கர். இன்று இந்திய அளவிலும், தமிழகத்திலும் நடக்கக்கூடிய சாதி, மத ரீதியிலான தூண்டுதல்களும், மோதல்களும், இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் மத்திய அரசு கடைபிடிக்கக்கூடிய நிலைப்பாடுகளும் இந்திய மக்களை ஜனநாயகமற்ற இந்தியாவை நோக்கி உந்தித்தள்ளும் ஆபத்தை உணர்த்துவனவாக உள்ளன. இதனால் அம்பானிகளுக்கோ, அதானிகளுக்கோ அவர்களால் பலனடையக்கூடிய அரசியல்வாதிகளுக்கோ எந்தவித பாதிப்பும் இல்லை என்ற அதீத நம்பிக்கை ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதை அவர்கள் உடனடியாக மாற்றிக்கொள்ள வேண்டும். ஏனெனில் உடனடி பாதிப்புகளை எதிர்கொள்ளக்கூடிய, ஏழை, எளிய, சாதாரண மக்களின் கொதிப்பும், கொந்தளிப்பும் இந்த நம்பிக்கைகளை சுக்குநூறாகிவிடும் என்பதை ஆட்சியாளர்களும், அதிகார வர்க்கங்களும், அவர்களின் அடிவருடிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

## குறி வைத்து தாக்கப்படும் உழைக்கும் வர்க்கம், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள்

மத்திய அரசும், எடப்பாடி பழனிசாமி அரசும் உலகமயம் தாராளமயக் கொள்கைகளை தீவிரமாக அமலாக்க முயன்று வருகின்றன. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் செல்வந்தர்களுக்கு அளப்பரிய சலுகைகளை வாரி வழங்குகின்றன. இந்தியாவின் கோயில்கள் எனப்புகழப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு தாரை வார்க்கப் படுகின்றன. வங்கிகள், நிதி நிறுவனங்கள், இன்சூரன்ஸ், கனிம வளங்கள், நெடுஞ்சாலைகள், கடல் வளங்கள், சுரங்கங்கள் என அனைத்தும் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு

அனுதினமும் வழங்கப்பட்டு வருகின்றன. மறுபக்கம், நாட்டின் உழைப்பாளி மக்கள், தொழிலாளிகள், விவசாயிகள், வியாபாரிகள், சிறு குறு தொழில் முனைவோர் உள்ளிட்ட அனைவரது வாழ்வும் நாசப்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளிகள் போராடிப் பெற்ற தொழிலாளர் நல உரிமைச் சட்டங்கள் ஒரே நாளில் பறிக்கப்பட்டுள்ளன.

மொத்த சமூகத்திற்கும் உணவு வழங்கும் உழவர்கள் நெருக்கடி தாங்காமல் தினம்தினம் தற்கொலை செய்துகொண்டு மாண்டு வருகின்றனர். விவசாயம் அழிந்து அதனால் நிலங்களை இழந்து கடன் சுமை தாங்காமல் கிராமப்புற மக்கள் அண்டை மாநிலங்களுக்கு புலம்பெயர்வது அதிகரித்துள்ளது. முற்றிலும் எதிர்பாராத கொரோனா காலத்தில் இந்திய நாட்டு மக்களின் வாழ்வு நொறுங்கிப்போய்விட்டது. உத்தரவாதமான பணியிலிருந்த இரண்டு கோடிக்கும் மேற்பட்டவர்கள் வேலையை இழந்துவிட்டனர். புலம்பெயர்ந்த அன்றாட உழைப்பாளிகள் வேலையையும், வாழ்வையும் இழந்து சொந்த ஊர்களுக்கு குடிபெயர்ந்துள்ளனர்.

## கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடும், தூண்டிவிடப்படும் சாதிய மோதல்களும்

பொதுத்துறை நிறுவனங்கள் சூறையாடப்படுவதால் போராடிப்பெற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் இடஒதுக்கீடு கேள்விக்குறியாகியுள்ளது. ஆனால் இதை புரிந்துகொள்ளாமல் குறுகிய நோக்கம் கொண்ட முழக்கங்களுக்காக சாதிய அமைப்புகள் பாஜகவின் வலையில் விழுந்து வருகின்றன. இத்தகைய சாதிய அணிதிரட்டல்கள் தீண்டாமை போன்ற சமூக கொடுமைகளை நியாயப்படுத்தவும், பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் கொடுமைகளுக்கு சாதிச்சாயம் பூசவும் பயன்படுத்தப்படுகின்றன. சமூகப்பிணிக்கு சாதிய அணிதிரட்டல் பயன்தராது.

ஹைட்ரோகார்பன் திட்டங்கள், எட்டு வழிச்சாலை, உயர் மின்கோபுரங்கள் போன்றவற்றால் விவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்படுகின்றன. விவசாயம் கொஞ்சம் கொஞ்சமாக கார்ப்பரேட்டுகளுக்கு கைமாற்றிவிடப்படுகிறது. இதற்கான சட்டங்களை மத்திய அரசும் மாநில அரசும் நிறைவேற்றியுள்ளன. இதனால் நிலத்தை இழந்து கொண்டிருப்பது அனைத்துப்பகுதி விவசாயிகளும்தான். விவசாயகூலி வேலையும் சுருங்கி வருவதால் அனைத்துப்பகுதிகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களும் வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர். இந்நிலையில் இடஒதுக்கீடு உள்ளிட்ட சமூக நீதிக்காக போராடுவதோடு, நிலம், வேலைவாய்ப்பு, சிறு குறு தொழில்கள், நெசவு போன்றவற்றை பாதுகாப்பதற்கு ஒன்றுபட்டு அனைத்துப்பகுதி மக்களும் போராட வேண்டிய அவசியம் இயல்பாகவே உருவாகியுள்ளது. விலைவாசி உயர்வு, வேலையின்மை, வறுமை போன்ற சமூகக் கொடுமைகளுக்கு சாதி மத வித்தியாசம் இல்லை. இதை எதிர்த்து போராட கிளர்ந்தெழும் மக்களை சாதிய அணிதிரட்டலில் தள்ளிவிட்டு சாதுர்யமாக காய் நகர்த்தப் பார்க்கிறது மத்திய அரசு. மக்களை தங்களுக்குள்ளாகவே சாதிய அடிப்படையில் மோதவிட்டு மற்ற பிரச்னைகளிலிருந்து மடைமாற்றம் செய்து, மக்களின் சசோதரச் சண்டையில் பெருகும் உதிரத்தை பருகி ருசி பார்க்க நினைக்கும் மத்திய அரசின் நயவஞ்சகத்தை நாம் அனைவரும் உணர்ந்து கொண்டு சாதிய வேற்றுமைகளுக்கு இடம் கொடாமல் உரிமைகளுக்கான போரை முன்னெடுக்க வேண்டும்.

தமிழகத்தில் நியாயமான இடஒதுக்கீடு கோரிக்கைகளுக்காகவும், கைரேகைச் சட்டம் போன்ற கொடிய சட்டங்களை எதிர்த்தும், ஆலய நுழைவுக்காகவும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் அணிதிரட்டல் என்பது கடந்த காலங்களில் நடந்துள்ளது. ஆனால் தற்போது சில அமைப்புகள் மற்றும் கட்சிகள் சாதிய அணிதிரட்டலை மேற்கொள்வது தங்களது சொந்த அரசியல் ஆதாயத்திற்காகவே பயன் படுத்தப்படுகிறது. சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் சமயத்தில் மேலும் சாதி அடிப்படையில் வாக்காளர்களை பிரிக்கும் போக்கு வலுவடைய வாய்ப்புள்ளது. தேர்தல் மற்றும் அரசியல் ஆதாயத்திற்காக மக்களை சாதி அடிப்படையில் அணிதிரட்டுவது, சாதிய உணர்வுகளை ஊட்டி வளர்ப்பது தமிழக மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும், எதிர்காலத்தில் பரஸ்பர மோதல் மற்றும் முரண்பாடுகளை அதிகரிக்கும். சாதி, மத அடையாள அரசியல் என்பது ஆளும் வர்க்கத்திற்கும் ஆதிக்க சக்திகளுக்குமே உதவியாக இருக்கும், உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட போராட்டத்தை சீர்குலைக்கும் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

## பாஜக-வின் சாதி அரசியல்

பாஜகவைப் பொறுத்தவரை பல்வேறு மாநிலங்களில் தனது வெற்றிக்காக சாதிய அணிதிரட்டலை கொஞ்சம் கூட கூச்சமில்லாமல் செய்து வருகிறது. உ.பி., தேர்தல் உட்பட ஒவ்வொரு சாதியாக கணக்கெடுத்து அவர்களது வாக்குகளை பெறுவதற்கு அனைத்து தில்லுமுல்லு திருகுதாள வேலைகளையும் செய்கிறது. இதற்காக சாதிக்கலவரங்களை தூண்டிவிடக்கூட அவர்கள் தயங்குவதில்லை. திரிபுராவில் இடதுமுன்னணி ஆட்சியில் உருவாக்கப்பட்ட பழங்குடிமக்கள் மற்றும் இதர பகுதி மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து தங்களது குறுகிய வாக்குவங்கி அரசியலுக்கு பயன்படுத்தினர். தமிழகத்தில் பாஜக ஏற்கனவே சாதி அடிப்படையில் தங்களுக்கான ஆதரவு தளத்தை திரட்டும் முயற்சியில்

ஈடுபட்டுள்ளது. முந்தைய அகில இந்திய தலைவரான அமித்ஷா பல்வேறு சாதி அமைப்புகளின் மாநாடுகளில் கலந்து கொண்டு தனது ஆதரவினைத் தெரிவித்ததன் மூலம் சாதிய அணிதிரட்டலை துவக்கி வைத்தார். சாதிய அமைப்புகளின் சாத்தியமற்ற கோரிக்கைகளைக் கூட தங்களது கட்சி ஆதரிக்கும் என அவர் வாய்ப்பந்தல் போடுகிறார். உயர்சாதி ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட கட்சிதான் பாஜக. ஆனால் அதை மறைத்து பல்வேறு சாதி சங்க தலைவர்களை தங்களுடைய வளையத்திற்குள் அந்தக் கட்சி கொண்டுவர முயல்கிறது.

## பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை விவகாரத்திலும் சாதிய பாகுபாடு

இரண்டு பெண்களின் பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் அரசாங்கங்கள் கடைபிடிக்கும் சாதிய பாகுபாடுகள் அவர்களின் சாதிய இன வெறிகளை தோலுரித்திருக்கிறது. நிர்பயா விவகாரத்திலும் ஹாத்ரஸ் மணிஷா துயர சம்பவத்திலும் காட்டப்பட்ட உயர்சாதி, கீழ்ச்சாதி என்ற, அரசாங்கங்களின் வேறுபட்ட அணுகுமுறைகள் மனிதகுலத்தையே வெட்கித் தலைகுனிய வைக்கக்கூடியவை. இரண்டு கற்பழிப்பு வன்கொடுமை நிகழ்வுகளை ஒப்பாய்வு செய்வது ஒருபோதும் சரியில்லைதான் என்றாலும் நிர்பயாவின் அவலத்தையும் ஹத்ரசின் மனிஷா வால்மீகியின் துயரத்தையும் அரசாங்கங்கள் எதிர்கொண்ட விதங்கள் எரிச்சலூட்டுபவையாய் அமைந்திருக்கின்றன. நிர்பயாவை சஃப்தர் ஜங் மருத்துவமனையில் சேர்த்தார்கள். அப்போது ஆட்சியிலிருந்த கட்சியின் தலைவர் சோனியா காந்தி மருத்துவமனைக்கு ஓடோடி வந்தார். நிர்பயாவின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் சொன்னார். நாடு முழுக்க மிகப் பெரும் அளவில் அந்தக் கற்பழிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. சோனியா காந்தி ஆர்ப்பாட்டக்காரர்களை நேரில் சென்று சந்தித்துப் பேசினார். உயர்தர, அவசர சிகிச்சைக்காக சிறப்பு விமானம் மூலமாக நிர்பயா சிங்கப்பூருக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து அவருடைய உடல் தலைநகருக்குக் கொண்டு வரப்பட்ட போது நாட்டின் பிரதமர் மன்மோகன் சிங்கும் ஆளுங்கட்சித் தலைவி சோனியா காந்தியும் விமான நிலையத்தில் உடலைப் பெறுவதற்காக காத்திருந்தார்கள். குற்றவாளிகளை விரைந்து பிடிப்பதில் தில்லி போலீஸ் அசாதாரணமான வல்லமையை வெளிப்படுத்தியது. வெகுவிரைவாக குற்றவாளிகள் அனைவருமே கைது செய்யப்பட்டனர். பாலியல் வன்கொடுமைக்கு எதிராக புதிய சட்டம் ஒன்றை அரசாங்கம் பிறப்பித்தது. அரசாங்கத்திலிருந்து மிரட்டல்கள் வந்தன என்று நிர்பயாவின் குடும்பத்தார் ஒரே ஒரு முறை கூட முறையிடவில்லை. நிர்பயாவின் உடலை அவளுடைய குடும்பத்தார் தங்களின் வீட்டுக்கு கொண்டு சென்றார்கள். தகனம் செய்தார்கள். இந்த இறுதிச் சடங்கில் தில்லி முதலமைச்சரும், மத்திய உள்துறை அமைச்சரும், தில்லி மாநில எதிர்கட்சித் தலைவரும் (பாஜக) பங்கேற்றார்கள். இந்த நிகழ்வுகளை நாட்டு மக்கள் ஒரு பெண்ணுக்கு நேர்ந்த கொடுமையாக பார்த்தார்களே தவிர உயர்சாதிப் பெண்ணுக்கு நேர்ந்த கொடுமையாகப் பார்க்கவில்லை.

ஆனால் ஹாத்ரசில் என்ன நடந்தது என்பதை நாடே பார்த்துக் கொண்டுதான் இருந்தது. உத்திரப் பிரதேச முதல்வர் அந்தக் குடும்பத்தாரைப் போய் பார்க்கவில்லை. மக்கள் மத்தியில் மிகப் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்ட பிறகு அவர் அந்தக் குடும்பத்தாருடன் இணையவழியாக பேசினார். மாவட்ட மாஜிஸ்திரேட் அந்த அபலைப் பெண்ணின் தந்தையை உரத்த குரலில் மிரட்டிய காணொளியை நாடே பார்த்தது. அந்த மாவட்ட மாஜிஸ்திரேட் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இப்போதுவரை தகவல் இல்லை. தங்கள் மகளுடைய உடலை வீட்டுக்கு கொண்டு சென்று மஞ்சளைப் பூசி இறுதிசடங்கு செய்வதற்காக அந்த அபலைப் பெண்ணின் தாயும் பிற உறவினர்களும் காவல்துறை அதிகாரிகளின் கால்களில் விழுந்து கதறியும் அனுமதி மறுக்கப்பட்டது. குடும்பத்தினர் எவருமே இல்லாத நிலையில் அவசர அவசரமாக நள்ளிரவில் அந்த அபலைப் பெண்ணின் உடலை போலீசார் எரித்தனர். அந்தப் பெண்ணின் குடும்பத்தாரைச் சந்தித்து ஆறுதல் சொல்வதற்கும் எவருக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. உத்திரப் பிரதேச அரசு இதற்காகவென்றே பிஆர் ஏஜென்சி ஒன்றை வாடகைக்கு அமர்த்தி ''பாலியல் வன்கொடுமை எதுவும் நடக்கவில்லை'' என பொய்ச் செய்தியை பரப்பியது. இந்த மாதிரியான அலங்கோலங்கள் நிர்பயா விவகாரத்தில் நடக்கவில்லை.


பாலியல் வன்கொடுமையில் இறந்து போனது ஒரு தாழ்ந்த சாதிப் பெண் என்பதாலும் ஏழைப் பெண் என்பதாலும் இந்நிகழ்வை அரசாங்கங்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் வேதனையளிப்பதாக உள்ளது. இதுபோன்ற பாகுபாடான நிலைப்பாடுகள் அரசாங்கங்களின் மீது ஏழை எளிய நடுத்தர மற்றும் கீழ்த்தர மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை சுட்டுபொசுக்கியிருக்கின்றன. இவை தொடரும் போக்கு காணப்படுவதால் மக்கள் மாற்றங்களை நோக்கிய பயணத்திற்கு தயாராகி வருகிறார்கள்.

## மருத்துவ படிப்பு விஷயத்தில் மத்திய அரசின் துரோகமும், மாநில அரசின் நாடகமும்

அடுத்ததாக கல்விக்கான இடஒதுக்கீடு பிரச்சனைகளில் தமிழக மக்களுக்கு மத்திய பாஜக அரசும், மத்திய அரசின் சொற்படி நடக்கும் தமிழக ஆளுநரும் செய்துள்ள

துரோகத்தையும் நாடகத்தையும் சாதாரணமாக கடந்து சென்றுவிட முடியாது. மருத்துவக் கல்விக் கனவை தகர்க்கக்கூடிய நீட் தேர்வு வேண்டாம் என்றும் அதிலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, தமிழக அரசியல் இயக்கங்கள் மற்றும் மக்களின் வலுவான போராட்டத்திற்குப் பிறகு தமிழக அரசு இரண்டு மசோதாக்களை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. ஆனால் அதில் குடியரசுத்தலைவர் கையெழுத்திடாமல் திருப்பி அனுப்பி வைத்தார். அப்படி திருப்பி அனுப்பும் போது அதற்கு என்ன காரணம் என்று தெரிவிப்பது சட்டப்பூர்வமான கடமையாகும். ஆனால் அதைக் கூட தெரிவிக்கவில்லை. உண்மையில் நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விதி விலக்கு அளித்திட மத்திய பாஜக அரசு விரும்பவில்லை என்பதுதான் நிதர்சனம். அதனால்தான் குடியரசுத் தலைவர் தமிழக சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாக்களை திருப்பி அனுப்பினார்.

இது ஒருபுறமிருக்க, நீட் தேர்வு அமலாகும் நிலையில், அதிலாவது ஏழை, எளிய மாணவர்கள் உரிய இடங்களைப் பெறும் வகையில் நியாயம் வழங்கும் விதமாக உள்ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்ற குரல் வலுத்திருக்கிறது. மாநில மருத்துவக் கல்வி நிறுவனங்களில், 15சதவீத இடங்கள் மத்திய அரசின் தொகுப்பிற்கு சென்றுவிடுகின்றன. இந்நிலையில் எஞ்சியுள்ள 85 சதவீத இடங்களில், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கலாம் என முடிவு செய்து, அதற்கான மசோதாவையும் சட்டமன்றத்தில் நிறைவேற்றியது தமிழக அரசு. 2020 செப்டம்பர் 15 அன்று நிறைவேறிய இந்த மசோதா. ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. அதை ஒரு மாதம் காலம் கிடப்பில் போட்டுவிட்டார் ஆளுநர். அக்டோபர் 16 அன்று நீட் தேர்வு முடிவுகளும் வெளியாகிவிட்டன. இந்த நிலையில் இன்னும் கால அவகாசம் கேட்டிருக்கிறார் ஆளுநர். ஏற்கெனவே, நடப்பு கல்வி ஆண்டில் பெரும்பகுதி காலம், கொரோனா ஊரடங்கு காரணமாக கடந்துசென்றுவிட்டது. இந்நிலையில் மேலும் அவகாசம் கேட்பது என்பது, 7.5 சதவீத இடஒதுக்கீடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கிடைக்கவிடாமல் செய்கிற நடவடிக்கையே ஆகும். கல்லூரிகள் திறந்தால் மருத்துவப் படிப்புக்கான கலந்தாய்வு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் நடக்கும் என்ற நிலையில், அரசு நிறைவேற்றிய மசோதாவுக்கு உடனே ஒப்புதல் அளிக்காமல் திட்டமிட்டே காலம் கடத்துவது கண்டனத்திற்குரியது. மருத்துவக் கல்வியில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்பது மிக முக்கியமானது. ஏனென்றால், மருத்துவக் கல்வி வாய்ப்பு சமதளமானதாக இல்லை. இதில் நீட் தேர்வை வேறு எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அரசுப் பள்ளிகளில் பயில்கிற மாணவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழை, எளிய குடும்பத்து பிள்ளைகள்தான். அவர்கள், லட்சக்கணக்கில் பணத்தைச் செலுத்தி நீட்தேர்வு சிறப்புப் பயிற்சி பெற முடியாது




என்பதே எதார்த்த நிலையாக உள்ளது. அந்த அடிப்படையில்தான் மருத்துவக் கல்வியில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5சதவீத உள்ஒதுக்கீடு வழங்குவது நியாயமானதாக இருக்கும் என்ற குரல் எழுந்து, மசோதாவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உள்ஒதுக்கீடு என்பது ஏதோ தமிழகத்தில் மட்டும்தான் எழுந்துள்ள குரல் அல்ல. ஏற்கெனவே கர்நாடகாவில் மருத்துவக் கல்வியில்கிராமப்புற மாணவர்களுக்கு 15சதவீதம் இடஒதுக்கீடு அளித்திருக்கிறார்கள். அது அமலாகிக் கொண்டிருக்கிறது. எனவே 7.5 சதவீத இடஒதுக்கீட்டிற்கு வகைசெய்யும் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் இழுத்தடிப்பது தமிழக மக்களுக்கு இழைக்கிற மிகப்பெரிய துரோகமாகும். 7.5 சதவீத இடஒதுக்கீட்டை தமிழகத்தில் யாருமே எதிர்க்கவில்லை. எனவே தமிழக ஆளுநர், இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 200ன் அடிப்படையில் உடனடியாக மசோதாவுக்கு ஒப்புதல்அளித்து கையெழுத்திட வேண்டும். மறுப்பது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது.

மற்றொருபுறம், இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி இடங்களில் 50சதவீத இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்பது தொடர்பான வழக்கில், அதற்கு எதிராக உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்திருப்பது மத்திய அரசு இடஒதுக்கீட்டு விஷயத்தில் கடைபிடிக்கும் போக்கை மீண்டும் உறுதிபடுத்தியுள்ளது. மருத்துவ இளநிலை பட்டப்படிப்பிற்கான இடங்களில் அனைத்து மாநிலங்களிலிருந்தும் 15 சதவீதத்தை மத்திய அரசு தனது தொகுப்பிற்கு எடுத்துக் கொள்கிறது. அப்படி எடுத்த இடங்களை தொகுத்து மறுபடியும் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்கிற போது, அந்த ஒதுக்கீட்டில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இது தொடர்பாக ஏற்கெனவே இந்திய மருத்துவக் கவுன்சில் தெளிவான வழிகாட்டுதலை வழங்கியிருக்கிறது. அந்தந்த மாநிலங்களில் அமலில் இருக்கிற இடஒதுக்கீட்டு கொள்கையின்படி அந்தந்த மாநிலங்களுக்கான ஒதுக்கீட்டை உறுதிசெய்ய வேண்டும் என்று மருத்துவக்கவுன்சில் கூறியிருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழகத்திற்கு, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50சதவீத இடஒதுக்கீடு அளித்திட வேண்டும்.

அதை மத்திய அரசு மறுத்து வருவதால், அதை அமலாக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக அரசும், தமிழக எதிர்க்கட்சிகளும் வழக்கு தொடுத்தன. இந்த வழக்கில் உச்சநீதிமன்றம், இந்த ஆண்டு 50சதவீத இடஒதுக்கீட்டை அமலாக்க முடியாது என்று மத்திய அரசு தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்டு, இந்த ஆண்டு 50சதவீத இடஒதுக்கீடு இல்லை என்று தீர்ப்பளித்துள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த இதரபிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பின் அகில இந்திய தொகுப்பில் 50 சதவீத இடஒதுக்கீடு அளிப்பது இல்லை என்ற மத்திய பாஜக அரசின் திட்டமிட்ட சூழ்ச்சி இதன் பின்னணியில் இருக்கிறது.

கொரோனா ஊரடங்கு காலத்தைப் பயன்படுத்தி இதுபோன்ற பல்வேறு மக்கள் விரோத நடவடிக்கைகளை யெல்லாம் அவசர அவசரமாக மேற்கொள்ள முடிந்த மத்திய அரசு, தமிழக இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் நலன் காக்கக்கூடிய 50சதவீத இடஒதுக்கீடு பிரச்சனையில், 'ஏற்கெனவே மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து அனுப்பிவிட்டார்கள், அதில் உள்ள விபரங்களை சரி செய்ய முடியாது' என்று சொத்தையான காரணத்தைக் காட்டி அதை தள்ளிப்போடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. தொழில்நுட்பம் வளர்ந்துள்ள யுகத்தில், உடனடியாக மறு அறிவிப்பு கொடுத்து விண்ணப்பம் பெறுவது இயலாத காரியமல்ல. ஆனால் அதைச் செய்ய அரசு மறுத்துள்ளது தமிழகத்திற்கும் தமிழக மாணவர் களுக்கும் செய்துள்ள துரோகமாகும்.

இதே மத்திய அரசு, வங்கிப் பணியாளர் தேர்வு பிரச்சனையில், எஸ்.சி., எஸ்.டி., மற்றும் ஓபிசி., பிரிவினருக்கான சட்டப்படியான இடஒதுக்கீட்டிலிருந்து, பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான 10சதவீத இடஒதுக்கீட்டிற்குரிய இடங்களை அளிக்க வேண்டும் என்பதற்காக, அவசர அவசரமாக எஸ்.சி., எஸ்.டி., ஓபிசி., இடஒதுக்கீட்டு சதவீதத்தை குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்கிறது. எனவே ஒட்டுமொத்தமாக, சமூகத்தின் மேல்தட்டில் உள்ள பிரிவினருக்கு அனைத்து பலன்களையும் அளிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய பாஜக அரசு மேற்கொண்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித், பழங்குடி மக்களுக்குரிய பலன்களை உறுதி செய்யாதது மட்டுமல்ல. அதை தட்டிப்பறிப்பதற்கான அரசியல் சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கிறது. இந்த இரண்டு இடஒதுக்கீடு விவகாரங்களிலும் மத்திய பாஜக அரசு தமிழக மக்களுக்கு பகிரங்கமாக துரோகம் இழைத்துள்ளது.

## ஆளுமையற்ற தமிழகம்

இட ஒதுக்கீடு விவகாரத்தில் நீதிமன்றங்கள் எப்போதுமே எதிரான நிலைப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன என்பது இப்போதல்ல காமராஜர் முதல்வராக இருந்த காலத்திலிருந்தே அறியப்பட்டுள்ள விஷயம் தான். காமராஜர் காலத்தில் இட




ஒதுக்கீட்டுக்கு எதிராக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னர் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து தமிழகத்திற்கென அரசியலமைப்புச் சட்டத்தில் இடஒதுக்கீட்டுக்கு சிறப்பு அங்கீகாரம் பெற்றார் அவர். 69 சதவீத இட ஒதுக்கீட்டு விவகாரத்திலும் செல்வி ஜெயலலிதா உச்சநீதிமன்றத்தின் எதிர்மறை தீர்ப்புக்குப் பிறகு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து 69 சதவீத இடஒதுக்கீட்டுக்கு சிறப்பு அங்கீகாரம் பெற்று அரசியலமைப்பு சட்டத்தில் அதை இடம்பெறச் செய்தார். ஆனால் இப்போதுள்ள எடப்பாடி அரசோ அத்தகைய அழுத்தமோ, பிடிவாதமோ செய்யாமல் கடிதம் எழுதிவிட்டும், கவர்னரை சந்தித்துவிட்டும் உத்தரவுக்காக காத்திருப்பதாக வழக்கம்போல் சொல்லியது தமிழகத்தின் அனைத்துப் பிரிவு மக்களையும் வெகுண்டெழச் செய்துவிட்டது. அனைத்துத் தரப்பிலிருந்தும் ஏற்பட்ட தமிழகத்தின் அனைத்துப் பிரிவு மக்களையும் வெகுண்டெழச் செய்துவிட்டது. அனைத்துத் தரப்பிலிருந்தும் ஏற்பட்ட புற அழுத்தம் காரணமாகவும், பாஜக கட்சியினர் இதன்காரணமாக தனித்து அறியப்பட்ட காரணத்தாலும் சட்ட வல்லுநர்களை ஆலோசித்து முடிவு அறிவிக்க மூன்று அல்லது நான்கு வாரங்கள் அவகாசம் தேவை என்ற கவர்னரின் அறிவிப்பும் பதிலும் மூன்று நாட்களுக்குள் மாறியது. தமிழக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டு விவகாரத்தில் கவர்னரின் பிடிவாதம் மூன்று வாரத்திலிருந்து மூன்று நாட்களாக சுருங்கியதன் பின்னணியில் மத்திய பாரதிய ஜனதா அரசாங்கத்தின் வஞ்சகம் வெளிப்பட்டுள்ளது. தமிழகத்தில் தேர்தல் நெருங்கி வரும் காரணத்தினாலும் தமிழகத்தில் உள்ள பாரதிய ஜனதா கட்சி தலைவர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டதாலும் மட்டுமே இந்த உரிமையை தமிழகம் பெறமுடிந்துள்ளதே தவிர இது முதல்வர் எடப்பாடியின் ஆளுமைதிறத்தால் பெறப்பட்டது அல்ல என்பது ஊரறிந்த செய்தியாகியுள்ளது.


## தமிழக பாஜகவின் தப்பாட்டம்

தமிழக பாஜகவினர் தமிழக மாணவர்களின் எதிர்காலக் கனவுகளுக்காக, தமிழக நலன்களுக்காக தமிழக மக்களோடு ஒன்றுபட்டு நிற்காமல், மத்திய அரசின் நிலைப்பாட்டை

ஆதரித்து பேசி வருகிறார்கள். இவர்களுடைய போராட்டம் எல்லாம் கவிஞர் வைரமுத்துவின் கருத்துக்கள் இந்துக்கள் மனதை புண்படுத்தியதாகவும், நடிகர் விஜய் படம், விஜய் சேதுபதி, நடிகை ஜோதிகாவின் கருத்துக்கள் இந்துக்களை காயப்படுத்தியதாகவும், கருப்பர் கூட்டம் சுரேந்திரன் கந்தசஷ்டி கவசத்தையும், தொல்.திருமாவளவன் மனுநீதி தர்மத்தை இழிவுபடுத்தியதாகவும் உள்ளதே தவிர நீட் தேர்வு, இந்தி திணிப்பு, புதிய கல்விக் கொள்ளை, விலைவாசி உயர்வு, ஓபிசி இட ஒதுக்கீடு பறிப்பு, வேலை வாய்ப்பின்மை, பெட்ரோல் டீசல் விலை உயர்வு, 5 மற்றும் 8ம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு , விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் எட்டுவழிச் சாலை அமைப்பு, காவிரி மேலாண்மையில் தமிழகத்தின் உரிமை பறிப்பு போன்றவற்றிக்காக இல்லை. கழகங்களற்ற தமிழகத்தை அமைக்கப்போவதாக வீரமுழக்கமிட்ட இவர்கள் இப்போது எம்ஜிஆரின் படத்தை வைத்துக்கொண்டும், பெரியாரிஸ்ட்டுகள் என்று பெயர்மாற்றம் செய்து கொண்டும் ஓட்டுவாங்க யாத்திரை செல்கிறார்கள். தமிழக மக்களின் நலன்களுக்காக இவர்கள் குரல்கொடுக்காத வரை இவர்களின் நாடகங்கள் அனைத்தும் தமிழக மக்களிடம் செல்லுபடியாகாது என்பதை இவர்கள் விரைவில் உணர்வார்கள்.

## உரிமைகளையும், உணர்வுகளையும் மதிக்கும் அரசாங்கமே இப்போதைய தேவை

சமூக, பொருளாதார, சாதி மத, இட ஒதுக்கீட்டுக் கொள்கைகளுக்கு எதிராகவும் இவை குறித்து இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தியுள்ள கோட்பாடுகளை கடைபிடிக்காமலும் செயல்பட்டு மேல்தட்டு மக்கள், கார்ப்பரேட் முதலாளிகள், அதிகார வர்க்கத்தினர் போன்றோர்க்கு ஆதரவாய் அவர்களுக்கு சலுகைகள், நிதி தள்ளுபடிகள் போன்றவற்றை செய்து வரும் மத்திய அரசுக்கும், சட்டத்திற்கு புறம்பான மத்திய அரசின் முடிவுகளுக்கு துணைபோகும் ஆளும் அதிமுக அரசின் தலையாட்டி போக்கிற்கும், சாதி மத பிரிவினைகளைத் தூண்டி தமிழக மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தப்ப பார்க்கும் பாஜகவின் சூழ்ச்சிக்கும் உரிய பதிலடி கொடுக்கும் வகையில் மக்கள் விழிப்புணர்வு இயக்கங்களை நாம் மேற்கொண்டு வருகின்ற தேர்தலில் தமிழக மக்கள், அரசு ஊழியர்கள் ஆகிய நம் உரிமைகளையும், உணர்வுகளையும் மதித்து செயல்படும் அரசாங்கத்தைத் தோற்றுவிப்போம். ❖




## ஒருபக்க வாதம்!

*'ஒரே தலைவன்'*
*ஆடுகளா மேய்ப்பதற்கு?*

*'ஒரே மதம்'*
*மாடுகளா மலைப்பதற்கு?*

*'ஒரே மொழி'*
*நாய்களா குரைப்பதற்கு?*

*'ஒரே நாடு'*
*பூனைகளா பதுங்குவதற்கு?*

*'ஒரே கல்வி'*
*பாசியா பச்சையாக்க?*

*'ஒரே வரி'*
*வசூலித்து ஏமாற்றவா?*

*ஏன் ஒரே ஒரு*
*'சாதி' கேட்கவில்லை?*
*சுரண்டுவதற்கு*
*சாதிகள் தேவை!*

*ஏன் ஒரே ஒரு*
*'கடவுள்' கேட்கவில்லை?*
*ஏமாற்றுவதற்கு*
*ஆண்டவன்கள் துணை தேவை!*

*ஏன் ஒரே ஒரு*
*'கோவில்' கேட்கவில்லை?*
*ஊரெங்கும்*
*உண்டியல்கள் தேவை!*

*ஏன் ஒரே ஒரு*
*'வர்க்கம்' கேட்கவில்லை?*
*சொத்துக் குவிப்பிற்கு*
*உழைக்கும் வர்க்கங்கள் தேவை!!*

- ***ஜெயராமன்***

# நவம்பர் 26 அகில இந்திய வேலைநிறுத்தம்
# இது ஒரு இரண்டாம் சுதந்திரப் போர்

**8** ஏப்ரல் 1929 அன்று காலையிலேயே டெல்லி மத்திய சபை பரபரப்பாக இயங்க ஆரம்பித் திருந்தது. மத்திய சபையின் நடவடிக்கையில் வழக்கத்திற்கு மாறான பரபரப்பு தொற்றிக் கொண்டிருந்தது. பார்வையாளர்களும் வந்து கொண்டிருந்தார்கள். அந்த பார்வையாளர்களை "இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு கழகத்தின்" இரண்டு பேர் இணைந்து சென்று மத்திய சபையின் பார்வையாளர் மாடத்தில் அமர்ந்து கொண்டார்கள். அவை நிகழ்ச்சிகள் தொடங்கின. டெல்லி மத்திய சபையின் கேள்வி நேரத்தில் வைஸ்ராயின் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி தொழில் தகராறு மசோதா நிறைவேறியதை அறிவிக்க ஜெனரல் ஹாஸ்டர் எழுந்தார். அடுத்த நொடியில் பார்வையாளர் மாடத்தில் அமர்ந்திருந்த மாவீரன் பகத்சிங்கும் அவரது சக தோழன் மகேஷ்வர் தத்தும் வெடிகுண்டுகளை யாருமற்ற இருக்கைகளின் மீது வீசினர். அந்த அரங்கம் முழுவதும் புகை மூட்டத்திற்கு இடையே பரபரப்பாக காட்சி அளித்தது.

குண்டை வீசிய பின் இருவரும் தப்பியோட முயற்சிக்கவில்லை. மாறாக அதே இடத்தில் நின்று "புரட்சி நீடூழி வாழ்க", "ஏகாதிபத்தியம் ஒழிக", "உலக பாட்டாளிகளே ஒன்று சேருங்கள்" என்று முழக்கமிட்டவாறு "செவிடர்களை கேட்கச் செய்வதற்கு வெடிகுண்டு முழக்கங்கள் அவசியமானவை" எனும் தலைப்பில் ஆன சிவப்பு நிற துண்டறிக்கைகளை வீசிக்கொண்டு இருந்தனர். அவர்களை நெருங்கத் தயங்கியவாறே காவலர்கள் நேரம் தள்ளியே நின்று கொண்டிருந்தனர். பின்னர் பகத்சிங்கும் தத்தும் அவர்களை நோக்கி உரத்த குரலில் தங்கள் கைதுக்கு தயாராக இருப்பதாகவும், தங்களிடம் ஆயுதங்கள் இல்லையெனவும் உறுதியளித்த பின்னரே காவலர்கள் அவர்களை நெருங்கி வந்து கைது செய்தார்கள்.

6 ஜூன் 1929 அன்று பகத்சிங்கும் பி.கே.தத்தும் நீதிமன்றத்தில் வரலாற்று புகழ்மிக்க அறிக்கையினை தாக்கல் செய்தார்கள். அதில் வெடிகுண்டு வீசியதை ஏற்றுக்கொண்ட அவர்கள் "இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு கழகத்தின்" நோக்கம் உயிர்பலி அல்ல... எங்களது ஒரே நோக்கம் செவிடர்களை கேட்க செய்வதும் செவிமடுக்காதவர்களுக்கு தக்க எச்சரிக்கை வழங்குவதுமேயாகும் என்றார்கள். மிகப் பலரும் எங்களை போன்றே செய்ய விரும்புகிறார்கள். வெளித்தோற்றத்தில் அமைதியாக காட்சியளிக்கும் இந்திய மக்கள் கடலிலிருந்து ஒரு மாபெரும் சூறாவளி எழும்பவிருக்கிறது... கற்பனாவாத சாத்வீகத்தின் காலம் முடிந்துவிட்டதைத் துளியும் சந்தேகத்திற்கிடமின்றி இளைய தலைமுறை ஏற்றுக்கொண்டு விட்டதை நாங்கள் அடையாளப்படுத்த மட்டுமே செய்துள்ளோம் இன்குலாப் ஜிந்தாபாத்... என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்துஸ்தான் சோசலிஸ்ட் குடியரசு கழகம் ஏன் இந்திய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் வெடிகுண்டு வீச முடிவு எடுத்தது. அதற்கான தேவை என்ன? இந்திய தொழிற்சங்க இயக்கம் முன்னேறிக் கொண்டிருந்த காலம் அது. இந்தியா முழுவதும் பரவலாக தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்று வந்தன (தற்போதும் அதே நிலைதான்). இந்திய தொழிலாளர்கள் தங்களுக்கான உரிமை பெறுவது என்பது தேசத்தின் விடுதலைக்குள் அடங்கி இருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து கொண்டதை வெளிப்படுத்துவதாக அந்த வேலைநிறுத்தப் போராட்டங்கள் இருந்தன. இதனால் தொழிலாளர் இயக்கங்களின் பிரதான கோரிக்கை தேச விடுதலை என்பதை நோக்கி வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தது. இவ்வாறு வளர்ந்து வரும் தொழிலாளர் இயக்கத்தை இதே போக்கில் அனுமதித்தால் அது காலப்போக்கில் தங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு ஊறு விளைவிக்கும் என்று கருதிய பிரிட்டிஷ்

மேசையிலிருந்து...

அரசு, "பொது பாதுகாப்பு மசோதா", "வர்த்தக வழக்குகள் மசோதா" ஆகிய இரு மசோதாக் களை உள்ளடக்கிய "தொழிற் தகராறு மசோதா"வை டெல்லி மத்திய சபையில் கொண்டு வந்தது. இதைக் கண்டித்து தான் தோழர்கள் பகத்சிங்கும், தத்தும் டெல்லி மத்திய சபையில் அன்று குண்டு எறிந்தார்கள்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந் நிகழ்வு அரங்கேறியது 90 ஆண்டுகள் ஆகி விட்டன. ஆனால் இந்த தேசம் "பிரிட்டிஷ் இந்தியா" என்று அழைக்கப்பட்ட காலம் அது. பிரிட்டிஷ் இந்தியா என்பது 300 ஆண்டுகளாக இந்திய துணைக்கண்டத்தில் வலுக்கட்டாயமாக ஆண்ட பிரிட்டிஷ்காரர்களின் ஏகாதிபத்திய ஆட்சியை குறிக்கும். கிபி 1747 முதல் கிபி 1947 வரை இங்கிலாந்தின் தனிநபர் வருமானம் 347 சதவீதமாக இருந்தது. அதே காலத்தில் இந்தியாவின் தனிநபர் வருமானம் 14 சதவீதமாக இருந்தது என்கிறது ஒரு புள்ளிவிவரம். இதிலிருந்தே பிரிட்டன் நம் நாட்டில் இருந்து எவ்வளவு சுரண்டி எடுத்துக் கொண்டது என்பதை புரிந்து கொள்ளலாம். இக்காலகட்டத்தில் சொந்த நாட்டுக்குள் இந்தியர்கள் அடிமைகளாக உயிர் பிழைத்திருந்தனர். (உதாரணம் தற்போது புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் சொந்த நாட்டில் அகதிகளாக இருந்த சம்பவங்கள் நினைவில்) இந்தியர்களின் இருண்ட வாழ்வுக்கான பொன் விழா இயற்கையாக வராது என்பது ஒவ்வொரு இந்தியருக்கும் உறுதியாக தெரிந்திருந்தது.

இந்த அடிமை வாழ்க்கையை முடிவுக்கு கொண்டுவர பலரும் பல வகையிலும் பாடுபட்டனர். பலர் அகிம்சை எனும் பாதையிலும் நடந்தனர். சிலர் எழுத்தாயுதம், பேச்சாயுதம், பாட்டாயுதம் (தற்பொழுது இந்த மூன்றும் செய்தால் தேச துரோக வழக்கு போட்டு கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்) ஏந்தி மக்கள் மத்தியில் விடுதலை உணர்வை எழுப்பினர். **மிகச்சிலர் புரட்சி எனும் ரத்த சேற்றின் மீது நடந்து சென்று தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். பெரும்பகுதி தொழிலாளி வர்க்கம் தங்களின் ஒரே ஆயுதமான "வேலைநிறுத்தம்"** எனும் ஆயுதத்தை அவ்வப்போது கையில் எடுத்து விடுதலைப் போருக்கு உரம் சேர்த்தது. பாதைகள் வேறாக இருந்தாலும் நோக்கம் ஒன்று மட்டுமே. அது தேச விடுதலை என்பது மட்டுமே. இந்திய விடுதலை வேள்வியில் அகிம்சையாளர்களின் நடவடிக்கைகளை விட புரட்சியாளர்களும் தொழிலாளர்களும் மேற்கொண்ட நடவடிக்கைகளே வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது. இறுதியில் 1947 ஆகஸ்ட் 15ல் அகிம்சையாளர்களிடம் தேசத்தின் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்து விட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வெளியேறியது. ஆம் தேசம் அரசியல் ரீதியாக விடுதலை பெற்றது.

இன்று நாம் வாழ்வது சுதந்திர இந்தியா...? சுதேசி இந்தியா... 74வது சுதந்திர திருநாளை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இன்றைய இந்தியாவின் நிலை என்ன? மத்தியில் மோடி அரசு பதவி ஏற்று 7 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. 2014 தேர்தலுக்கு முன்பு பாஜக ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வீசியது. அதனால் மக்கள் மத்தியில் ஏராளமான எதிர்பார்ப்புகள் இருந்தன. ஆனால் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் நிலை என்ன என்பது பற்றி மறுஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழலை ஒழிப்போம் என்று உரக்க முழங்கினார்கள். ஆனால் இன்று பாஜகவினரின் ஊழல் முடைநாற்றம் நாசிகளை துளைக்கிறது. தொடர் போராட்டத்தின் விளைவாக உருவான தகவல் உரிமைச் சட்டம், ஊழல் கண்காணிப்பு ஆணையம், லோக்பால், லோக் ஆயுக்தா, ஊழலை அம்பலப்படுத்த பாதுகாப்பு சட்டம் ஆகிய ஊழலை வெளிக் கொணர்வதில் முக்கிய பங்கு வகிக்கும் இவ்வமைப்புகளுக்கு ஆணையர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்காமல் இந்த அமைப்பையே தகர்க்கும் செயலை மோடி அரசு செய்து வருகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு இதுவரை பதில் அளிக்கப்படவில்லை.

பாஜக ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்பு பணத்தை 100 நாட்களில் மீட்டு இந்திய மக்களின் வங்கிகளில் ஒவ்வொருவருக்கும் 15 லட்சம் போடுவோம் என மேடைதோறும் முழங்கினார் பிரதமர் மோடி. ஆனால் இதுவரை ஒரு ரூபாய் கூட போடவும் இல்லை, கருப்பு பணமும் வந்து

விட்டது என்று கூறுகிறது மத்திய அரசு. ஆனாலும் முழுமையாக வந்து சேரவில்லை.

ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும், வேலையின்மைக்கு தீர்வு காண வேண்டும் எனில் அதிகமான வேலைகள் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு தொழில்மயமாதல் அவசியம் என சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி குறிப்பிட்டார். "மேக் இன் இந்தியா" பிரச்சாரம் அறிவிக்கப்பட்டது. பிரதமர் மோடி பல்வேறு நாடுகளுக்கு பயணம் செய்த பின்பும் ஒவ்வொரு புதிய முதலீடும் இந்தியாவுக்கு வரவில்லை. பிரதமர் மோடியோடு எப்போதும் பயணம் செய்யும் அதானியின் சொத்து மதிப்பு மட்டும் இந்த கொரோனா காலத்தில் கூடியுள்ளது. இந்தியா வில் பில்லியனர்களின் (பணக்காரர்களின்) எண்ணிக்கை 50 லிருந்து 100 சதவீதமாக உயர்ந்துள்ளது. டாட்டா, பாரதி, எச்டிஎப்சி, மகேந்திரா, விப்ரோ உள்ளிட்ட பெரு நிறுவனங்களின் சொத்துக்கள் 10 லட்சம் கோடிக்கு மேல் தாண்டி விட்டன. கடந்த 5 ஆண்டுக்கு முன்பு ஆஸ்திரேலியாவின் மைக்கேல் நிலக்கரி சுரங்கம் ஒப்பதற்திற்காக சர்வதேச வங்கிகள் கடன் தர மறுத்த நிலையில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மூலம் அதானிக்கு ரூ. 6400 கோடி கடன் வழங்க பிரதமர் மோடி அவர்கள் உத்தரவிட்டார்.

விவசாயிகளின் நண்பன் என்று கூறப்படும் மோடியின் ஆட்சியில் இன்றைக்கு மூன்று விவசாய விரோத சட்டங்களை இயற்றி இந்தியாவில் விவசாயத்தில் 85% விளைநிலங்களை வைத்திருக்கும் சிறு குறு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். குறிப்பாக, பதுக்கல்களையும், கருப்பு சந்தையையும் ஊக்குவிக்கும் சட்டம், வேளாண் ஒப்பந்தம் மூலமாக விவசாயிகளை அடிமை யாக்கும் சட்டம், கார்ப்பரேட்டுகள் மூலம் வேளாண் வர்த்தகம் மேற்கொள்ளும் துரோகச் சட்டம் என்று தான் மோடி அரசின் இந்த 3 விவசாய விரோத சட்டங்களுக்கும் பெயரிட்டு இருக்க வேண்டும். புதிய சட்டங்களில் விவசாயி விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை பற்றிய உத்தரவாதம் இல்லை. அரசியல் கட்சிகளும், சமூக இயக்கங்களும் நடத்தும் எவ்வளவு பெரிய போராட்டங்களை யும் கண்டுகொள்ளாமல் இருப்பது பிரதமர் மோடி அவர்களின் வழக்கம்.

ஆனால் மோடி அரசின் 3 விவசாய விரோத சட்டங்களையும் திரும்பப் பெறக் கோரி நாடு முழுவதும் போராட்டங்கள் பிரதமர் மோடி அவர்களை அசர வைத்தது.

செப்டம்பர் 6ஆம் தேதி முதல் அக்டோபர் 1ஆம் தேதி முடிய உள்ள காலத்தில் மோடி அவர்கள் 6 முறை விவசாயிகள் போராட்டத்தைப் பற்றி பேசியுள்ளார்.

கடந்த பத்தாண்டு காலத்தில் நாடு பார்க்காத மிகப்பெரிய போராட்டம் விவசாயிகள் போராட்டம். பல்வேறு மாநிலங்களில் சக்திமிக்க போராட்டமாகவும், முழு வேலை நிறுத்தம் போன்ற நிகழ்வுகளும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்றுள்ளது.

மொத்தம் 243 உறுப்பினர்கள் உள்ள நாடாளுமன்ற மாநிலங்களவையில் 127 உறுப்பினர்கள் எதிர்த்த போதும், சட்டவிரோதமாக அந்த மசோதாவை நிறைவேற்றி கொண்டது பாஜக அரசு.

இந்த விவசாய மசோதாவில் மத்திய அமைச்சர் ராஜினாமா செய்தது மட்டுமல்ல, எந்த போராட்டத்தையும் இயக்கங்களையும் பற்றி பேசாத பிரதமர் மோடியை பேச வைத்த போராட்டமாக அமைந்தது.

கல்விக்காக முந்தைய அரசைப் போல் வரி வசூலிக்கும் பாஜக அரசு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதம் கல்விக்காக ஒதுக்குவதற்கு பதிலாக தொடர்ந்து குறைந்து கொண்டு வருகிறது. கல்வி காவிமயமாகும் ஆபத்து அதிகரித்துள்ளது. அறிவியல்பூர்வமான கருத்துக்கள் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. புதிய கல்வி கொள்கை என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட குழந்தைகளின் கல்வி கேள்விக்குள்ளாகும் சூழ்நிலை உள்ளது.

மத்திய அரசின் வணிக ரீதியான பன்னாட்டு மருந்து நிறுவனங்களுக்கு சாதகமான கொள்கை காரணமாக உயிர்காக்கும் மருந்துகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு பெருமளவு குறைக்கப்படுகிறது.

மத்திய அரசின் வணிக ரீதியான பன்னாட்டு மருந்து நிறுவனங்களுக்கு சாதகமான கொள்கை காரணமாக உயிர் காக்கும் மருந்துகளின் விலை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு பெருமளவு குறைக்கப்படுகிறது. இந்த கொரோனா என்னும் கொடிய நோய் வரிசையில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. மத்திய, மாநில அரசுகள் தடுக்கும் நடவடிக்கைகளில் அதிக முனைப்பு காட்டாமல் இந்த நோயுடன் மக்கள் வாழ பழகிக்கொள்ள வேண்டும் என ஆட்சியாளர்கள் உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமான இந்தியாவின் கோவில்கள் என்று அழைக்கப்படு கின்ற பொதுத்துறை நிறுவனங்களை மிக வேகமாக தனியாருக்கு தாரைவார்க்கும் போக்கினை தொடர்ந்து செய்துகொண்டிருக் கிறது. உதாரணம் வங்கி, பாதுகாப்பு, எல்ஐசி, பிஎஸ்என்எல், வெடிமருந்து தொழிற்சாலை, சுரங்கம் கொரோனாவின் தாக்கத்தால் மக்கள் முழுமையாக இயல்பு நிலைக்கு திரும்ப முடியாமல் அல்லல்பட்டு நோயோடு எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருக்கும்போது மோடி அரசு துறைகளை தனியார்மயமாக்கும் முடிவு அமுலாக்கப்படுகிறது. உதாரணம் உலகின் மூன்றாவது பெரிய ரயில் போக்குவரத்து இந்தியா இடம்பிடித்துள்ளது. பாஜக அரசின் தனியார்மய மிருக வெறி பிடித்த யானை போல ஓடத் துவங்கி விட்டது. பாஜகவின் இரண்டாவது ஆட்சி நிறைவடைவதற்குள் மிகப்பெரிய பொதுத்துறையான ரயில்வே முழுவதும் நொறுக்கப்பட்டு கார்ப்பரேட்டுகளின் கைகளில் தாரை வார்க்கப்பட தனியார்மய திட்டங்கள் வேகமாக அரங்கேறுகின்றன.

224 ரயில்களை 109 வழித்தடங்களில் தனியாருக்கு ஏலம் விட கடந்த ஜூலை 21ஆம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டது. தென்னக ரயில்வே 139 தளங்களில் 25 ரயில்களை ரூ.3221 கோடிக்கு கொடுத்திட முடிவு. நாடு முழுவதும் 150 ரயில்கள் ரூ.30,000 கோடிக்கு 35 வருடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 500 பாசஞ்சர் விரைவு ரயிலாக மாற்றம் ரயில்வேயில் மொத்தம். அரசு மருத்துவமனைகளின் ஆய்வுக் கூடங்கள் தனியார்மயம், கருவூலத்துறை, வேளாண் துறை பணிகள் தனியார் மயம் என பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு கொண்டு வருவதற்கு முன்பே தமிழக அரசு ஊழியர்களுக்கு 1.4.2003 முதல் புதிய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வந்தது இன்றைய தமிழக ஆட்சியாளர்கள் தான் என்பதும், இந்த புதிய ஓய்வூதிய திட்டத்துக் கான சந்தா தொகையாக லட்சக்கணக்கான ஊழியர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகை பல்லாயிரம் கோடி எங்கே இருக்கிறது என்ற கேள்விக்கான விடையை தெரியாத நிலை இன்னும் நீடித்து வருகிறது என்பதும் நாம் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

மத்திய மாநில ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் ஒன்றைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. அது தேசம் கூறுபோட்டு விற்கப்படுகிறது என்பதே. இதுகுறித்து உழைப்பாளி மக்கள், தொழிற்சங்கங்கள் கேள்வி எழுப்பினால் இன்றைய பொருளாதார நெருக்கடியில் இத்தகைய சீர்திருத்தங்களை உள்ளடக்கிய உலகமயமாக்கல் தவிர்க்க முடியாதது என்கின்றனர் ஆட்சியாளர்கள். அது என்ன உலகமயம்? தேசத்தை நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கிற மந்திர சக்தி கொண்டதா அது?

உலகமயம் என்றால் என்ன?
வேறொன்றுமில்லை தன்னிடம் இருக்கும் ஒரு பொருளைக் கொடுக்க மறுக்கும் கருமித்தளத்திற்கு பதிலாக ஒருவனிடம் இருக்கும் எல்லாவற்றையும் பறித்து எடுக்கும் கொள்ளையடிப்பதில் நவீன அழைப்பே உலகமயம். அதாவது ஏகாதிபத்தியம்+ முதலாளித்துவம்=உலகமயம் என்பதுதான் உண்மையாகும். இந்த உலகமயம் தவிர்க்க முடியாது தன் ஆட்சியாளர்கள் செய்யும்போது அப்பாவி பொது மக்களும் ஆம் ஆம் என்று வேகமாக தலையாட்டுகிறார்கள். ஏனெனில் உலக மயம் என்பது ஒரு நாசகார கொள்கை என்பதை அவர்களால் உணர முடியவில்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும். முதலில் நாம் அதை உணர்ந்திருக்கிறோமா?

இன்று கண்ணுக்கு தெரியாத பல ரூபங்களில் உலகமயம் நம் வீட்டுக்குள் வந்தமர்ந்துள்ளது. நாம் வீட்டு சமையல் அறையில் சாப்பிட்டு மேசையில் வந்து அமர்ந்திருக்கும் பீசா அது ஏகாதிபத்தியம் என்பதை உணர்ந்திருக் கிறோமா... நம் வியர்வையை ரத்தத்தை சிந்தி உழைக்கும்போது கிடைக்கும் லாபத்தில் ஒரு சிறு பகுதியை கூலி என நமக்குக் கொடுத்துவிட்டு மீதமுள்ள பெரும்பகுதியை எவ்வித நியாயமும் இன்றி அபகரித்து கொள்கிற அடாவடித்தனம் தான் முதலாளித்துவம். இதை நாம் புரிந்திருக்கிறோமோ? இந்த ஏகாதிபத்தியத் தையும் முதலாளித்துவத்தையும் உலகம்

முழுமைக்குமான கோட்பாடாக மாற்றி இதுதான் உலகமயம் இதுதான் சிறந்தது ஒழுக்க மானது என்கிறது ஆளும் வர்க்கம். ஆம் எல்லா ஒழுங்குகளையும் சிதைக்க எவ்வொழுங்குக்கும் அந்த நாள் ஒழுங்கு இந்த உலகமயமாகும். இத்தகைய உலகமயம் இங்கு படுத்தப்பட்டதால் தான் இந்தியா இன்று ஏகாதிபத்தியத்தின் வேட்டைக் காடாக மாறிக்கொண்டிருக்கிறது. உண்மையில் இந்தியா இத்தகைய சிறப்பான தேசமா...?

இந்தியா... தமிழகம்... கிராமிய பொருளியலைக் கொண்டது கிராமியம் என்பது வேளாண் சமூகம் மட்டுமல்ல... அது ஒரு குணம்... அதாவது வேளாண் குணம்... ஈரம் நிறைந்தது... மென்மையானது. தேசம் முழுவதுமான இத்தகைய கிராமிய பொருளியலை கிராமிய குணத்தை ரணகளமாக்கியது யார்? கிராம மக்களை உண்டு இல்லை என்று ஆக்கி விவசாயத்தை கைகழுவி நரகம் அடையச் செய்தது யார்? நரக பேய்களின் உருவாக்கத்தில் ஆடு மாடு நிலபுலன் என்றிருந்த உடமைகளின் இடத்தில் வீடு, மாடி, மனை, அடுக்குமாடி, கார் என செங்குத்தாய் போகலாம் என்ற சிந்தனையை உருவாக்கியது யார்? வேளாண் சமூகம் தன் நெஞ்சில் சேகரம் செய்து வைத்திருந்த இடத்தை எல்லாம் உறிஞ்சியது யார்? இப்படி பல யார்கள் நம் முன் கேள்வியாய் நிற்கிறது. அதே நேரத்தில் இன்னொன்றும் மாபெரும் துயரமாய் வந்துள்ளது.

அது இவ்வளவு அழிவுக்கும் காரணமாக இருப்ப வர்கள் குற்ற உணர்ச்சியற்று இருக்கிறார்களே என்பதுதான் இன்றைய காலத்தின் மாபெரும் துயரம். உலகம் மெல்ல மெல்ல குற்ற உணர்ச்சியற்றவர்களின் ஆதிக்கப் பிடிக்குள் சென்று கொண்டிருப்பதை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இன்று பலரும் பலவிதமாகப் பேசுகிறார்கள்... பேசிக் கொண்டேருக்கிறார்கள். பல தலைப்புகளில் பட்டிமன்றங்கள் நடத்துகிறார்கள். ஆனால் இன்றைய வாழ்வின் அவலநிலை குறித்து அதன் அடிப்படை காரணி குறித்து பட்டிமன்றம் நடத்துவது இல்லை. இன்று நம் கண்முன்னே சமகாலத்தின் பிரச்சனைகள் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் அவை பற்றி எவரும் பேசுவதில்லை. பேசுகிற ஒரு சிலரும் கூட இன்றைய காலச் சூழலில் இது தவிர்க்க முடியாதது என்கிறார்கள்.

காலம்... காலச் சூழல்... தவிர்க்க முடியாது எனில் அந்த காலத்தை சரியான வழியில் முன் நடத்திச் செல்ல வேண்டிய வழிகாட்டிகள் யார்? நாம்... நாம்தான்... நம்மைப் போன்று சமூக அக்கறையுள்ள தொழிற்சங்கங்கள் தான் அதற் கான அனைத்து தகுதிகளும் நமக்கு மட்டுமே உண்டு. ஒரு தொழிற்சங்கத்தின் அடிப்படையான முதன்மையான பணியானது எது என்றால்... தான் வாழும் சமூகத்தை நேராக கொண்டு செலுத்த என்னென்ன வழிகள் உண்டோ அதையெல்லாம் செய்ய முன்னெடுப்பது தான்...


அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்கத்தின் தேசிய செயற்குழு முடிவின்படியும், நமது சங்கத்தின் மாநில செயற்குழுவின்படியும், தமிழ்நாடு அரசு அனைத்து துறை சங்கங்களின் போராட்டக் குழுவினை தொடர்ந்து தேசம் காக்கும் நவம்பர் 26 வரை வேலை நிறுத்தத்தில் பங்கெடுப்பது என அறிவிக்கப்பட்ட நிலையில் விரிவான பிரச்சாரத்தை முன்னெடுத்துச் சென்று வேலை நிறுத்தத்தை வெற்றி அடைய செய்ய வேண்டும் என அறைகூவல் விடுக்கப்பட்ட நிலையில் விரிவான பிரச்சாரத்தை முன்னெடுத்துச் சென்று வேலைநிறுத்தத்தை வெற்றி அடைய செய்திட வேண்டும்.

ஆம் தோழர்களே சமகாலப் பிரச்சனைகள் பற்றி பேசுவோம், பேசிக்கொண்டிருப்போம். அங்கே, இங்கே, வீட்டில், விடுதியில், அலுவலகத்தில் என எல்லா இடங்களிலும் வாழ்வின் அவலங் களை அதன் காரணங்களை ஓங்கி உரக்க பேசு வோம். கடந்த காலங்களில் நாம் எடுத்த ஒவ்வொரு முயற்சியும் நடத்திய ஒவ்வொரு போராட்டமும் பிரச்சினைகளையும் பின்னுக்குத் தள்ளியிருக்கிறது. ஆட்சியாளர்களின் முயற்சிகளை பலவீனப்படுத்தி இருக்கிறது என்பதை அனைவருக்கும் உணர்த்துவோம்.

நாம் செயல்கள் புரிய புரிய உண்மைகள் தெரிய தெரிய ஊழியர்கள், தொழிலாளர்கள், அப்பாவி பொதுமக்கள் தாங்கள் எவ்வளவு தூரம் வஞ்சிக் கப்படும் என்பதை உணர்வார்கள். அனுபவம் அவர்களுக்கு போதி மரம் ஆகும். அங்கொன் றும் இங்கொன்றுமாய் முணுமுணுப்பவர்கள் நிச்சயம் அநீதிகளுக்கு எதிராய் அணிதிரள்வர்.

அதற்கான மாபெரும் சூறாவளியாய் எழுவோம்
**நவம்பர் 26இல் வெற்றிபெறச் செய்வோம்**
**அகில இந்திய வேலை நிறுத்தத்தை.**
**இன்குலாப் சிந்தாபாத்.** ❖

# வரலாற்று நாயகன் பிடல் காஸ்ட்ரோ



**பி**டல் காஸ்ட்ரோ 1926-ம் ஆண்டு ஆகஸ்டு 13-ந் தேதி கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தந்தை ஏஞ்சல் காஸ்ட்ரோ ஸ்பெயின் நாட்டுக்காரர். தாயார் லினா கியூபாவைச் சேர்ந்தவர்.

வசதியான விவசாய குடும்பத்தில் பிறந்த பிடல் காஸ்ட்ரோ ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டம் மற்றும் சமூக அறிவியல் பட்டப்படிப்பு படித்தபோது அவருடைய சிந்தனை அமெரிக்காவுக்கு எதிராக திரும்பியது. அமெரிக்காவின் கைப்பாவையாக செயல்பட்ட சர்வாதிகாரி பாடிஸ்டாவின் ஆட்சிக்கு எதிராக புரட்சியாளராக மாறினார்.

1953-ம் ஆண்டு இளைஞர்களைத் திரட்டி கிழக்கு நகரான சாண்டியாகோவில் அரசுக்கு எதிராகப் போராடினார். இதில் அவருக்குத் தோல்வியே கிடைத்தது. இதனால் பிடல் காஸ்ட்ரோவும் அவருடைய தம்பி ரவுலும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

நீதிமன்றத்தில் 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' எனும் புகழ்பெற்ற பிடல் காஸ்ட்ரோவின் ஆவேசமான உரை நீதிபதிகளின் மனதைக் கரைய வைத்தது. இதனால் 1955-ம் ஆண்டு அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இதன்பிறகுதான் பிடல் காஸ்ட்ரோவின் வாழ்க்கையில் பல அதிரடி திருப்பங்கள் ஏற்பட்டன. மெக்சிகோ நாட்டில் அடைக்கலம் புகுந்த அவர் தென் அமெரிக்காவின் இன்னொரு புரட்சியாளரான சேகுவேராவுடன் இணைந்து புரட்சிக்கு குழு ஒன்றை உருவாக்கினார். 1956-ல் பாய்மரப் கப்பல் மூலம் நாடு திரும்பினார்.

அவருடைய குழுவினர் திட்டமிட்டபடி கியூபாவுக்குள் ஒரே இடத்தில் கப்பல்களை கரைக்குக் கொண்டு தரையிறங்க முடியவில்லை. வெவ்வேறு திசைகளில் சென்று விட்டனர். எனினும், கியூபாவின் கிழக்குப் பகுதியான சியர்ரா மாஸ்ட்ரா மலைப்பகுதியில் பிடல் காஸ்ட்ரோவின் புரட்சிக் குழுவிற்கு அமோக ஆதரவு கிடைத்தது.

3 ஆண்டுகள் பாடிஸ்டாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக காஸ்ட்ரோவின் கொரில்லாப் படைகள் போராடின. அவருடைய புரட்சிப் படைகள் தலைநகர் ஹவானாவை 1959-ம் ஆண்டு ஜனவரி 8-ந்தேதி கைப்பற்றின. அதைத்தொடர்ந்து பிரதமர் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்பு அதிபராகவும் ஆனார்.

நாடு ஜனநாயகப் பாதைக்குத் திரும்பும் என காஸ்ட்ரோ அறிவித்ததால் அமெரிக்கா முதலில் அவருக்கு ஆதரவு தெரிவித்தது. ஆனால் அடுத்த சில மாதங்களில் கடுமையான பொருளாதார சீர்திருத்தத்தை காஸ்ட்ரோ கியூபாவில் மேற்கொண்டார். கியூபாவின் வளர்ச்சியில் எரிச்சலடைந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் கியூபாவைக் கபளீகரம் செய்ய தொடர்ந்து முயற்சி செய்தது.

பிடல் காஸ்ட்ரோவைக்கொல்ல சதித்திட்டங்கள் அரங்கேறின. கியூபாவில் இருந்து வெளியேறி நாடு கடந்த நிலையில் இருந்தவர்கள் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் உதவியுடன் வளைகுடாவை ஆக்கிரமித்து நெருக்கடி கொடுத்தனர். அதை காஸ்ட்ரோ தோற்கடித்தார்.

அமெரிக்காவின் முக்கிய எதிரியான சோஷலிச சோவியத் ரஷ்யாவின் பக்கம் சேர்ந்தார். விரைவிலேயே அமெரிக்காவுக்குச் சவாலாகவும் திகழ்ந்தார். ஆப்பிரிக்காவில் விடுதலைக்காகப் போராடிய புரட்சிக் குழுக்களுக்கு ஆதரவாக தனது நாட்டின் குழுக்களை இவரும் சேகுவேராவும் இணைந்து அனுப்பினர். இந்த ஆதரவு 1977-ம் ஆண்டு வரை தொடர்ந்தது.

இதற்கிடையே, 1962-ல் சோவியத் ரஷ்யாவின் அணுசக்தி ஏவுகணைகளைக் கியூபாவில் நிலை நிறுத்த உடன்பட்டதால் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜான் எப்.கென்னடி பகிரங்கமாகவே ரஷியா மீது குற்றம்சாட்டி கியூபா அருகே எந்த போர்க்கப்பலையும் நிறுத்தக் கூடாது என்று தடை விதித்தார். இதனால் பல வாரங்கள் கியூபா கடற்பகுதியில் பதற்றம் நீடித்தது.

பின்னர், அப்போதைய ரஷ்ய அதிபர் குருஷேவ், அணுசக்தி ஏவுகணைகளை கியூபாவில் இருந்து திரும்பப் பெற்றார். இதனால் அணு ஆயுதப் போர் மூளும் அபாயம் நீங்கியது. என்றபோதிலும் கியூபாவின் மீதான அமெரிக்க வன்மம் அதிகரித்தது. ரஷியாவுடன் சேர்ந்து கொண்டு தனது நாட்டை எதிர்க்கத் துணிந்ததால் பிடல் காஸ்ட்ரோவை பதவியில் இருந்து வெளியேற்ற அமெரிக்கா துடித்தது. முதல் நடவடிக்கையாக கியூபாவிடம் இருந்து சர்க்கரை கொள்முதலை நிறுத்திக் கொண்டது. பதிலுக்கு காஸ்ட்ரோ அமெரிக்கர்களின் ஒரு பில்லியன் சொத்துகளை முடக்கினார். இதனால் அமெரிக்கா-கியூபா மோதல் மேலும் அதிகரித்தது. கியூபா மீது அமெரிக்கா வர்த்தக தடைகளை விதித்தது.

பிடல் காஸ்ட்ரோவைத் தீர்த்துக் கட்டுவதற்காக 638 சதித்திட்டங்களை அமெரிக்கா தீட்டி அதைக் கியூபாவில் இருந்து நாடு கடத்தப்பட்டவர்கள் வழியாக அரங்கேற்றவும் முயற்சித்தது. என்ற போதிலும் சதிவேலைகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன. அமெரிக்காவின் ஒவ்வொரு முயற்சியையும் அவர் துணிச்சலாக முறியடித்தார். பொருளாதாரத் தடைகளையும் கியூபா மக்களின் ஒருமித்த ஆதரவால் வெற்றிகரமாக சமாளித்தார். தனது ஆட்சிக் காலத்தில் 11 அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு அவர் சுமார் 50 ஆண்டுகள் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார்.

வெளிநாட்டு முதலாளிகளையும், தனியார் நிறுவனங்களையும் கியூபாவில் தொழில் தொடங்க அனுமதித்தது கியூபா. இந்நிலையில் கியூபாவிடம் இருந்து விலகி நின்ற தென் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய உறவை மீண்டும் புதுப்பித்துக் கொண்டன. 1998-ம் ஆண்டு போப் ஆண்டவர் இரண்டாம் ஜான்பால் அந்நாட்டு பயணம் செய்தார். கியூபாவிற்குச் சுற்றுலா வருவோரின் வெளிநாட்டு எண்ணிக்கை அதிகமாகி அந்நாட்டின் பொருளாதாரம் வலுப்பெறத் தொடங்கியது. அதே நேரம் அரசின் மீதான பிடல் காஸ்ட்ரோவின் பிடியும் உறுதி பெற்றது.

2006-ல் அவருக்கு குடல் பிரச்சினையால் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அதிகாரப் பொறுப்பை 2008-ம் ஆண்டு தனது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோ வசம் அவர் ஒப்படைத்தார். பொருளாதாரத் தடையையும் மீறி கியூபா அபரிதமான வளர்ச்சி கண்டது. கியூபாவின் 'சோஷலிசம் அல்லது மரணம்' எனும் லட்சியத்துடன் கியூபர்களின் அளப்பரிய உழைப்பாலும் கொள்கை உறுதியாலும் சர்க்கரைக் கிண்ணமான கியூபா நிகரற்று விளங்குகிறது. உலகின் மிகச் சிறந்த மருத்துவத்தை கியூபா அந்நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல் பிற நாடுகளுக்கும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது

பிடல் காஸ்ட்ரோவின் மரணத்தால் கியூபா நாடே சோகத்தில் மூழ்கியது. இதுபற்றி ஹவானா நகரில் 22 வயது நர்சு தயான் மாண்ட்ல்வோ கூறும்போது, "இது மிகப்பெரிய துயரம். நாங்கள் எல்லாம் அவருடைய காலத்தில் பிறந்து வளர்ந்தோம். அவருடைய மரணத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை" என்றார்.

மெக்சிகோ ஜனாதிபதி என்ரிக் பெனா நியட்டோ டுவிட்டர் பதிவில், "பிடல் காஸ்ட்ரோவின் மரணம் என்னைப் புலம்ப வைத்துள்ளது. 20-ம் நூற்றாண்டின் மிகப்பெரிய புரட்சி வீரராக அவர் திகழ்ந்தார்" என்று குறிப்பிட்டார் .கியூபாவின்

விடுதலைக்கான அவருடைய இள வயது போராட்ட வாழ்க்கையும், அமெரிக்கா மீது எந்தவொரு நாட்டின் அதிபரும் காட்டாத, காட்டத் துணியாத எதிர்ப்பை பிடல் காஸ்ட்ரோ வெளிப்படுத்தியதும் புரட்சி வாழ்க்கைக்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்ததும் பிடல் காஸ்ட்ரோவின் பெயருடன் உலக வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பது நிச்சயம்.

(பிடல் காஸ்ட்ரோ நினைவு நாள்

செப்டம்பர் 25)

- **பெரணமல்லூர் சேகரன்**

## மீன்வளத்துறை இயக்குனருடன் சந்திப்பு

தூத்துக்குடி மாவட்டத்தில் பணிபுரிந்த மகாராஜன் மற்றும் ராஜ்குமார் பணி மாறுதல் செய்தது மீண்டும் அதே இடத்தில் பணியிட மாறுதல் வழங்குவது குறித்தும் மேலும் சாந்தகுமார் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து கிருஷ்ணகிரிக்கு மாறுதல் குறித்தும் நமது சங்கத்தின் சார்பில் 23.10.2020 அன்று முறையீடு கொடுக்கப்பட்டு பேசப்பட்டது துணை இயக்குனர் உரிய நடவடிக்கை எடுப்பதாக உத்தரவாதம் அளித்துள்ளார்.

# கருவூலத்துறையை தனியார் மயப்படுத்துவதை கண்டித்து அரசு ஊழியர்கள் தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம்

**த**மிழ்நாடு அரசு கருவூல கணக்குத்துறையில் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்தாமல் பல்வேறு குறைபாடுகளுடன், பாதுகாப்பற்ற ஒருங்கிணைந்த நிதி மேலாண்மை திட்டத்தை (IFHRMS) விப்ரோ என்ற தனியார் நிறுவனம் வழியாக செயல்படுத்துகின்றது. அதில் உள்ள குறைபாடுகள் களையப்படவில்லை. சர்வர் மிக மோசமாக செயல்படுகின்றது. பல்வேறு தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளது. இந்நிலையில்... கருவூலத்துறையை தனியார் மயப்படுத்துவது, இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிப்பது, அரசு தன் கடமையிலிருந்து தவறுவது உள்ளிட்ட தமிழக அரசின் ஊழியர் விரோத போக்கை கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் மாவட்ட கருவூல அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று 08.10.20 அன்று மாநில செயற்குழு முடிவு செய்தது. அதன்படி நடைபெற்ற விவரம்

### வடசென்னை

வட சென்னை மாவட்டம் எழும்பூர் சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகத்தில் IFHRMS திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி மாவட்ட செயலாளர் மா.அந்தோணிசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில தலைவர் மு.அன்பரசு கோரிக்கை விளக்கவுரை நிகழ்த்தினார்.

### தென் சென்னை

சம்பள கணக்கு அலுவலகம் முன்பு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தென்சென்னை மாவட்ட தலைவர் டேனியல்ஜெய்சிங் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் வினோத்குமார் விளக்க உரை ஆற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் உடைய மாநிலச் செயலாளர் இரா.நம்பிராஜன் ஆர்ப்பாட்ட விளக்கவுரை ஆற்றினார். தென்சென்னை மாவட்ட பொருளாளர் சுமதி நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் பகுதி குழு நிர்வாகிகள் உட்பட 70க்கும் மேற்பட்ட முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### நாகப்பட்டினம்

மாவட்டக் கருவூலம் (மாவட்ட ஆட்சியரகம்), நாகப்பட்டினம், வேதாரண்யம், கீழ்வேளூர், குத்தாலம், மயிலாடுதுறை, தரங்கம்பாடி மற்றும் சீர்காழி ஆகிய இடங்களில் சார்நிலைக் கருவூலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் எம்.மேகநாதன் தலைமை தாங்கினார். வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் விளக்கவுரையாற்றினார். புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் ப.அந்துவன்சேரல் சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் நிறைவுரையாற்றினார். வட்டப் பொருளாளர் சி.பாலசுப்பிரமணியன் நன்றியுரையாற்றினார்.

குத்தாலம் சார்நிலைக் கருவூலம் ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட இணைச் செயலாளர் ஆர்.கமலதாசன் தலைமையேற்றார். வட்டச் செயலாளர் எம்.இராமச்சந்திரன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். வட்டத் தலைவர் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு




வருவாய்துறை கிராம உதவியாளர் சங்கத்தின் ஏ.நல்லமுகமது, தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கத்தின் ஆர்.கமலநாதன், தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் தங்க. சுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்டத் தலைவர் து.இளவரசன் நிறைவுரையாற்றினார். வட்ட துணைத் தலைவர் பி.ராஜமோகன் நன்றி கூறினார்.

வேதாரண்யம் சார்நிலைக் கருவூலத்தின் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தணிக்கையாளர் வி.எஸ்.இராமமூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட துணைத் தலைவர் பா.ராணி விளக்கவுரையாற்றினார். முன்னாள் வட்டச்



செயலாளர் எம்.ஜி.இராமமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் நிறைவுரையாற்றினார். வட்ட துணைத் தலைவர் துர்க்காம்பிகா நன்றி கூறினார்.

## தஞ்சாவூர்

மாவட்ட கருவூல அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் சா.கோதண்டபாணி தலைமையேற்றார். மாவட்டச் செயலாளர் ஆ.ரெங்கசாமி விளக்கவுரையாற்றினார். நில அளவை அமைச்சுப் பணி ஊழியர் சங்கத்தின் பா.முருகன், ஐடிஐ அலுவலர் சங்கத்தின் நவந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வேளாண்மைத் துறை அமைச்சுப் பணி ஊழியர் சங்க மாநிலத் தலைவர் ஆர்.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் சிவ.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

## திண்டுக்கல்

மாவட்ட கருவூலம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமையேற்றார். மாவட்ட செயலாளர் முபாரக் அலி விளக்கவுரையாற்றினார். வாழ்த்துரை கருவூல கணக்கு துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளர் சிக்கந்தர், கூட்டுறவு துறை ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் பிச்சை வேல், நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர் சங்கத்தின் மாநில செயலாளர் ராஜமாணிக்கம், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சுகந்தி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

## பெரம்பலூர்

மாவட்ட மையத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் இளங்கோவன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. மாவட்ட செயலாளர் குமரிஅனந்தன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர்கள் சிவக்குமார், இ.மரியதாஸ் கொளஞ்சி, மாவட்ட இணைச் செயலாளர்கள் சு.சரவணசாமி, முனைவர் கா.பால்பாண்டி, பன்னீர் செல்வம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட தணிக்கையாளர்கள் தெய்வராசா, ராஜ்மோகன், வருவாய் துறையின் ராமலிங்கம், சத்துணவு ஊழியர்கள் சங்கத்தின் பெரியசாமி, மேரி, ஜெயந்தி, புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கத்தின் பாக்கியராஜ், நூலக துறை ஊழியர்கள் சங்கத்தின் முருகன், துறைவாரி சங்க மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். மாவட்ட பொருளாளர் பெ.ராஜராஜன் நன்றி கூறினார்.

## கரூர்

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் கெ. சக்திவேல் விளக்க உரை ஆற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் எம்.எஸ்.அன்பழகன், சுரேஷ்குமார், பிரகாஷ், ராஜேந்திரன், செல்வன், க.அறிவழகன், ஆர்.பிரேம்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி கூறினார். இதில் 50க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## தருமபுரி

கருவூல அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஏ.சேகர் ஆர்ப்பாட்டத்தை விளக்கிப் பேசினார். மாநில துணைத் தலைவர் கோ.பழனியம்மாள் சிறப்புரையாற்றினார்.

ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் என்.ருத்ரையன், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் எஸ்.சரவணன், மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில், அங்கன்வாடி பணியாளர் சங்க நிர்வாகி தெய்வானை உள்ளிட்ட நிர்வாகிகள் கண்டன உரையாற்றினர். இந்த ஆர்பாட்டத்தில் பி.சின்னசாமி, பி.பிரபாகரன், ஜி.முனிராஜ், சி.எம்.நெடுஞ்செழியன், சி.அழகிரி உள்ளிட்ட அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி நன்றி கூறினார்.

## காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட கருவூல அலுவலகம் முன் மாவட்ட செயலாளர் துரை.மருதன்

தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் குமார் வரவேற்றார். இணை செயலாளர் நவின்குமார் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட தலைவர் வெ.லெனின் கோரிக்கை விளக்கவுரை நிகழ்த்தினார். மாவட்ட இணை செயலாளர் ரஞ்சித்சிங் நன்றி கூறினார்.

## கள்ளக்குறிச்சி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட மையத்தின் சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மாவட்ட தலைவர் அனந்தகிருஷ்ணன் தலையில் நடைபெற்றது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் ஜி.கொளஞ்சி வேலு, மாவட்ட துணைத் தலைவர்கள் சரவணன், ஜி. வீரபுத்திரன், மாவட்ட இணை செயலாளர்கள் சாமிதுரை, வேலு, சத்துணவு ஊழியர் சங்கத்தின் வடிவேல், வட்டத் தலைவர் கோதண்டம், வட்ட செயலாளர் குமாரதேவன், வட்ட பொருளாளர் முத்து, வட்ட இணை செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, சுந்தர்ராஜன், வட்ட துணைத் தலைவர்.சீனுவாசன், சின்னசேலம் வட்ட செயலாளர் அண்ணாமலை, மாவட்ட செயற்குழு காஞ்சனா மேரி, திருக்கோவிலூர் வட்ட தலைவர் குணசேகரன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். மாவட்டச் செயலாளர் மகாலிங்கம் நிறைவுரையாற்றினார். இறுதியாக ரவி நன்றியுரையாற்றினார்.

## கிருட்டினகிரி

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் நடராஜன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். கோரிக்கையை ஆதரித்து சி.கல்யாணசுந்தரம் (TNSEA), வெங்கடேசன் (TNMCEA), திம்மராஜ் (தமிழ்நாடு சாலைப் பணியாளர் சங்கம்) ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட பொருளாளர் தேவராஜ் நன்றி கூறி ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார். ஆர்ப்பாட்டத்தில் 14 பெண்கள் உட்பட 73 ஊழியர்கள் பங்கேற்றனர்.

## கடலூர்

மாவட்ட கருவூல அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ஆர்.பாலசுப்ரமணியன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் கோரிக்கை விளக்க உரை ஆற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் எஸ்.கருணாகரன் வாழ்த்தி பேசினார். மாவட்ட பொருளாளர் டி.இரவிச்சந்திரன் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் முன்னணி உறுப்பினர்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## திருவாரூர்

மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் வெ.சோமசுந்தரம் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கே.எஸ்.செந்தில் வாழ்த்தி பேசினார்.

கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநில செயலாளர் பி.பரமேஸ்வரி, மாவட்டத் தலைவர் எஸ்.மகேஷ், த.நா.புள்ளியியல் துறை அலுவலர் சங்கத்தின் சிவக்குமார், வேளாண்மைத்துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் சின்னையன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் சி.குமார், சாலைப்பணியாளர் சங்கத்தின் அ.தனபால் ஆகியோர் வாழ்த்தி பேசினர். கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.சௌந்தரராஜன் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் உ.சண்முகம் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் சி.பிரகாஷ் நன்றி கூறினார்.

## திருச்சி

மாவட்ட கருவூல அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணை தலைவர் எம்.சகாதேவன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் பழனிசாமி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்ட கருவூல கணக்குத் துறை ஊழியர் சங்கத்தின் பாபு, பீட்டர், சாலை பணியாளர் சங்கத்தின் சக்திவேல், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் கலைச்செழியன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட பொருளாளர் ஆர்.சுந்தர்ராஜ், மாவட்ட துணைத் தலைவர் ஜீவானந்தம், மாவட்ட இணைச் செயலாளர் வெங்கடேசன், இரண்டாவது வட்ட கிளை தலைவர் கோவிந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் பெரியசாமி சிறப்புரையாற்றினார். மாவட்ட இணைச்செயலாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## திருப்பூர்

மாவட்ட கருவூல கணக்குத் துறை அலுவலகம்

முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட துணைத் தலைவர் ராணி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எம்.பாலசுப்பிரமணியம் கண்டன உரையாற்றினார். துறைவாரி சங்கத்தின் என்.சிவகுமாரன், பி.மகேந்திர பூபதி, பி.அமாவாசை, ஆர்.கருப்பன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். என்.ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

### மதுரை

மாவட்டக் கருவூல அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் ஜெ.மூர்த்தி தலைமையேற்றார். மாவட்ட செயலாளர் க.நீதிராஜா கண்டன உரையாற்றினார். ஜாக்டோ-ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு.சந்திரன் வாழ்த்தி பேசினார். பொதுச் செயலாளர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பெ.சீனுவாசன், தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்க மாவட்டச் செயலாளர் பாலமுருகன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாவட்ட, வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் துறைச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் மு.ராம்தாஸ் நன்றி கூறினார்.

### திருவண்ணாமலை

மாவட்ட கருவூலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில பொருளாளர் மு.பாஸ்கரன் கண்டன உரையாற்றினார். வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் பார்த்திபன், ராஜா (மாநில பொதுசெயலாளர், TNSOU) ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

❖

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்**

**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

✆ 28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

*நாள் : 2.11.2020*

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை அறிவிப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை 2020 டிசம்பர் மாதம் 20ஆம் தேதி ஜோதி மகால், பென்னாகரம் சாலை, தருமபுரி என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

**பொருள்கள்**

பொதுச் செயலாளர் அறிக்கை - வேலை அறிக்கை - நிதிநிலை அறிக்கை

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுடன்,

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்

பெறுநர்
மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்

## நவம்பர் 26 அகில இந்திய பொது வேலை நிறுத்தம்

# போராடிப் பெற்ற உரிமைகளை போராடி காப்போம்!

"நிச்சயமாக வெற்றியடையும் என்ற நிலைமையில் தான் போராட்டங்கள் நடக்க வேண்டுமென்றால் உலக சரித்திரம் மிக சுலபமாகிவிடும்......

உடனடி பலன்கள் எவ்வாறாயினும் சரி, உலக சரித்திர முக்கியத்துவம் பெற்ற பாதையின் திருப்பத்தில் முதல் அடி எடுத்து வைத்தாகி விட்டது"

- கார்ல் மார்க்ஸ்

வளர்ச்சி என்ற சொல்லுக்குப் பின் ஒளிந்திருக்கும் நுண் அரசியலுக்கு இந்திய தேசம் பெரும் விலையை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

### வளர்ச்சி என்பது யாருக்கு?

ஒரு தனி நபர் 6,000 கோடி ரூபாயில் 27 அடுக்குமாடி கட்டி ஒரு மாதத்திற்கு 6 லட்சம் யூனிட் மின்சாரம் பயன்படுத்தி வருகிறார் .......

ஒரு நாளுக்கு ரூ. 20/-கூட செலவு செய்ய முடியாமல் துன்புறும் 77 கோடி மக்கள் வாழ்வதும் இந்நாட்டில் தான் ........!

உழைப்பாளி மக்களின் வாழ்க்கை வீதியோரத்தில் வீழ்ந்து கிடக்கிறது என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

18ஆம் நூற்றாண்டில் ஜேம்ஸ் வாட் நீராவி இன்ஜினை கண்டுபிடித்தப்பிறகு ஏற்பட்ட முதல் தொழில் புரட்சியில் முதலில் சுரண்டப்பட்டது தொழிலாளிகளின் உழைப்பு தான்.

அறிவியல் மற்றும் நவீன தொழில் நுட்பங்கள் வியத்தகு முன்னேற்றம் அடைந்துள்ள இந்த நூற்றாண்டிலும் தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பு நவீன முறையில் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

### காலனி ஆதிக்கத்தில் இருந்த காலகட்டத்தில்...

1908ஆம் ஆண்டு தூத்துக்குடியில் வ.உ.சி.கைது செய்யப்பட்ட போது பொருளாதார கோரிக்கை ஏதும் இல்லாமல் நடைபெற்ற இந்தியாவின் முதல் அரசியல் வேலை நிறுத்தம் தொடங்கி......

திலகர் கைது செய்யப்பட்ட போது பம்பாய் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தம் .....

இரயில்வே தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ......

பஞ்சாலை தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ......

இப்படியாக நாடு முழுவதும் பரவிய வேலை நிறுத்தங்கள்

வேலை நேரம், ஊதிய உயர்வு / போனஸ் போன்ற கோரிக்கைகள் முன்னுக்கு வந்து அது குறித்து திட்டவட்டமான முடிவுக்கு வர அன்றைய ஆட்சியாளர்களுக்கு நிர்பந்தம் ஏற்பட்டது.

அதன் விளைவாக தொழிலாளர்களின் கோரிக்கைகளை பரிசீலிக்கவும், போராட்டங்களை கட்டுப்படுத்தவும் பிரிட்டிஷ் அரசு தொழிலாளர் நல சட்டங்களை இயற்ற வேண்டியதாயிற்று.

1926- தொழிற்சங்க சட்டம்

1946 - தொழில் வேலை வாய்ப்புச் சட்டம்

1947- தொழிற் தகராறு சட்டம், தொழில் நல்லுறவு மசோதா

என்று தொழிலாளி வர்க்கம் தனக்கான பாதுகாப்பை தனது தியாகத்தின் மீது நின்று தான் 44 தொழிலாளர் நலச்சட்டங்களை உருவாக்கிக் கொண்டது. இதனால் உழைப்பாளிகளின் வாழ்க்கையில் பணிப் பாதுகாப்பும், சமூக முன்னேற்றமும் உறுதிப்படுத்தப்பட்டது.

### பொறுக்குமா நவீன தாராளமயம்?

மூலதனத்தை கொழுக்க வைக்க தொழிலாளர் நலச்சட்டங்களை காவு கொடுக்க துணிந்து விட்டது கார்ப்பரேட் நலனில் அக்கறை கொண்ட அரசு. 44 தொழிலாளர் நலச்சட்டங்களை 4 சட்ட தொகுப்பாக்கியதில் ஒன்று தான் "புதிய ஊதிய திருத்த மசோதா - 2019 ".

நாடு முழுவதும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவு? ரூ. 4,628/-

1956ஆம் ஆண்டு டாக்டர் அக்ராய்ட் பரிந்துரைகளின் அடிப்படையில் இன்றைய நிலவரப்படி குறைந்தபட்ச ஊதியமாக ரூ 21,000/- நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நடந்திருப்பது கொடுமையிலும் கொடுமை.

தற்போது, தொழில் உறவுகள் தொகுப்பு சட்டம்- 2020இல் தொழிலாளி வர்க்கத்தின் கடைசி ஆயுதமான வேலைநிறுத்தம் என்பதையும் பறிப்பதாகவே உள்ளது.

உலகம், இதுவரை சந்தித்திராத கோவிட் 19 என்ற மருத்துவ பேரிடரில் மூச்சு திணறிக்கொண்டிருக்கிறது.

உலகின் பல நாடுகள் மக்களுக்குத் தேவையான மருத்துவம், சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்ற வாழ்வாதார அம்சங்களின் மீது கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் வேளையில் மக்களுக்குத் தேவையான உடனடி நிவாரணம் வழங்குவதற்கு மாறாக,மத்திய அரசு நீர், நிலம், காற்று, நெருப்பு (எரிபொருள்), ஆகாயம் என்று சகலத்தையும் தனியாருக்கு தாரைவார்க்க "ஓவர்டைம்" பணியாற்றுகிறது.

இத்துடன், நாட்டை பின்னுக்கிழுக்கும் புதிய கல்விக் கொள்கை, சுற்றுச்சூழல் தாக்க வரைவு மசோதாவும் அடக்கம்.

மக்களின் சேவகர்களாகிய அரசு ஊழியர்கள் தங்கள் உயிரைப் பற்றிக்கூட கவலைகொள்ளாமல் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். தன்நலம் கருதாது தொண்டாற்றும் ஊழியர்களின் உழைப்பை இடறும் வகையில்,

மத்திய, மாநில அரசுகள் ஒன்றரை ஆண்டு காலத்திற்கு 3 தவணை அகவிலைப்படி முடக்கம்.....

ஒரு வருடத்திற்கு சரண் விடுப்பு ஒப்படைப்பு உரிமை பறிப்பு.....

பொது வைப்புநிதிக்கான வட்டி 0.8% குறைப்பு....

ஓர் ஆண்டிற்கு புதிய பணி நியமனங்களுக்குத் தடை.....

இவற்றோடு,புதிய பென்சன் திட்டம் ரத்து, 21 மாத நிலுவைத் தொகை, சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், ஊர்ப்புற நூலகர்கள், MRB செவிலியர்கள், கணினி இயக்குநர் உள்ளிட்டோருக்கான முறையான ஊதிய விகிதம், அரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடம் நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து அரசு நீண்ட மவுனம் சாதித்து வருகிறது.

ஜேக்டோ - ஜியோ போராட்டத்தின்போது 5068 தலைவர்கள் மீதான பழிவாங்கும் நடவடிக்கைகளை தமிழக அரசு இதுவரை நல்லெண்ணத்தின் அடிப்படையில் விலக்கிக்கொள்ள முன்வரவில்லை.

## அனுமதிக்க முடியாது...

உயிரையும் துச்சமென மதித்து மக்களுக்குப் பணியாற்றும் அரசு ஊழியர்-ஆசிரியர்கள்,விரல் ரேகைகள் தேய்ந்து போகும் அளவிற்கு உழைத்து இந்த தேசத்தை வியத்தகு வளர்ச்சிக்கு உயர்த்திக் கொண்டிருக்கும் உழைப்பாளிகளின் நலனில் அக்கறை கொள்ளாத மத்திய, மாநில அரசுகள் - தேசத்தை எப்படி வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும்?

உழைப்பாளி மக்களின் உரிமைப் போராட்டங்கள் அவர்களுக்கானது மட்டுமல்ல...

இந்த தேசத்தின் வளர்ச்சிக்குமானது என்பதை மீண்டும் நிரூபிப்போம்.....

மக்களோடு இணைந்து நின்று சாதிப்போம்!

தொழிலாளர் நலச்சட்டங்களை மீட்டெடுப்போம்.....

பொதுத் துறை நிறுவனங்களை பாதுகாப்போம்...

மக்கள் ஒற்றுமை பாதுகாப்போம்....

நிலுவைக் கோரிக்கைகளை வென்றெடுக்கவும், பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப்பெற்றிடவும்

2020 - நவம்பர்-26 அகில இந்திய வேலைநிறுத்தத்தில் பங்கேற்போம்!

ஒரே மனிதனாய் - இந்திய நாட்டின் உழைப்பாளி வர்க்கத்தின் சின்னமாய் எழுந்து நிற்போம்!

ஒன்றுபடுவோம்! போராடுவோம்! முன்னேறுவோம்!

- **ஆர்.நடராஜன்**,
கிருட்டிணகிரி

# எட்டாக்கனியாக நீடிக்கும் மலைப்பிரதேச - பழங்குடி மக்களின் கல்வி

**கொ**ரோனா என்னும் நுண்கிருமி தீ இன்று உலகம் முழுவதும் தீ போன்று பரவி உலகத்தையே புரட்டிப் போட்டுள்ளது. இந்த நுண்கிருமியால் மிகவும் மோசமான பாதிப்பு என்றால் அது மாணவர்களுக்கு தான். கல்வி கற்றலை நிலைகுலைய வைத்துள்ளது என்பது நிதர்சன உண்மை. இந்தியாவில் 14 இலட்சம் பள்ளிகள் இருக்கிறது. அதில் 20.1 இலட்சம் குழந்தைகள் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை அரசு பள்ளிகளிலும், ஒன்பதாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை 38 லட்சம் குழந்தைகள் மற்ற அனைத்து பள்ளிகளிலும் கல்வி கற்பதால் பள்ளி கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அறிக்கை 2016-17 தெரிவிக்கிறது. 29% குழந்தைகள் 6 முதல் 14 வயதுக்கு உட்பட்டவர்கள். 19.29% குழந்தைகள் கல்வி உரிமைச் சட்டம் 2009இன் படி கல்வி கற்க வேண்டியவர்கள்,

கல்வி உரிமை சட்டம் 2009 குழந்தைகள் கல்வி கற்க விருப்பத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. ஆனால் இன்னும் 60 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கே வரவில்லை என்று 2014ம் ஆண்டின் பள்ளிக்கல்வி தேசிய ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. கொரோனா நுண்கிருமி தீ நோய்த்தொற்று உலக அளவில் பள்ளி கல்விக்கு பல சவால்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரே நாடு என்ற முழக்கத்தை முன் மொழிகின்ற இந்திய அரசாங்கம் புதிய கல்விக் கொள்கை வரைவினில் பள்ளிப் பாடங்களை மறுபரிசீலனை செய்துள்ளது. ஆன்லைனில் கற்றல் ஊக்கப்படுத்தப்படுகிறது.

சவால்கள் பல இருந்தபோதும் பெரும்பாலான தனியார் பள்ளிகள் ஆன்லைன் வகுப்புகள் மூலம் வீட்டில் இருக்கும் மாணவர்களுக்கு பாடம் நடத்துகிறார்கள். ஆனால் கிராமங்கள் மற்றும் மலைப் பகுதியில் வசிக்கும் மாணவர்களுக்கு ஆன்லைன் கல்வி முறை சாத்தியமே இல்லை. குறிப்பாக பழங்குடி




மக்களின் குழந்தைகள் தான் முதல் தலைமுறை கல்விக் கற்பவர்களாக உள்ளனர். கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டுள்ள இக்காலகட்டத்தில் மலைப்பிரதேச பகுதிகளில் உள்ள பெரும்பாலான குழந்தைகள் ஆன்லைன் கல்வி கற்றல் என்பது சாத்தியப்படாத ஒன்றாக உள்ளது. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மின்சார வசதிகள் இல்லை. தோட்டத் தொழிலாளர்கள் வாழும் ஒரு சில பகுதிகளில் மட்டுமே மின்சாரம் வழங்கப்படும். இந்த சூழலில் ஆன்லைன் வகுப்புகளில் பழங்குடியின மாணவர்கள் பங்கெடுத்துக் கொள்ள நிர்ப்பந்திப்பது அந்த குழந்தைகளின் மனநிலையை பாதிக்கும்.

அதேபோல் இயற்கை பேரிடர் காலங்களில் பள்ளி கட்டிடங்களும் பள்ளிகளை இணைக்கும் சாலைகளும் சேதமடைகிறது. பள்ளிக்கூடங்களை புனர்வாழ்வு மையமாக மாற்றுவது பள்ளியை மீண்டும் திறப்பதில் நிச்சயமற்ற நிலை ஏற்படுகிறது. இந்தியாவில் கல்வி உரிமைச்சட்டம் இயற்றப்பட்டதன் அடிப்படை நோக்கம் ஆரம்பக் கல்வியில் தரம் மற்றும் நெறிமுறையான கட்டமைப்பை உருவாக்குவதாகும். இச்சட்டம் இயற்றப்பட்டு 11 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் 12% பள்ளிகளில் மட்டுமே பாதுகாப்பான குடிநீர், தூய்மையான கழிப்பறைகள், கைகழுவும் வசதி, தடையில்லா மின்சாரம், காற்றோட்டமான வகுப்பறைகள் உள்ளன.

மாணவர்கள் இருப்பிடத்திலிருந்து 1 கி.மீ. தூரத்திற்குள் பள்ளி இருக்க வேண்டும் என்பது கல்வி உரிமைச் சட்டத்தின் ஒருங்கிணைப்பு கொள்கை. ஆனால் அரசுப் பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டு வருவதன் மூலம் இக்கொள்கை கைவிடப்பட்டுள்ளது. மதுக்கடைகளை ஏற்படுத்த அரசு மேற்கொள்ளும் துரித நடவடிக்கை பள்ளிகளை திறக்க மேற்கொள்வதில்லை. அதோடு

தற்போது ஏற்பட்டுள்ள நுண்கிருமி தீ பாதிப்பால் பள்ளிகளை மீண்டும் திறப்பது என்பதும், அதன் உள் கட்டமைப்புகளை மறுசீரமைப்பு செய்வது என்பதும் பெரிய சவாலாக உள்ளது.

இந்தியாவில் பள்ளிக் கல்வித் துறையில் 10,93,166 ஒப்பந்த ஆசிரியர்கள் உள்ளனர். பீகார், டெல்லி போன்ற பல மாநிலங்களில் ஆசிரியர்களுக்கு கொரோனா நுண்கிருமி தீ பரவுவதற்கு முன்பிருந்தே முறையாக ஊதியம் வழங்கப்படவில்லை. பள்ளிகள் ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் பணியுடன் சமூகப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து, சுகாதாரம் இவற்றோடு உணர்வுபூர்வ ஆதரவையும் வழங்குகிறது. பொருளாதார வல்லுநர்களின் மதிப்பீட்டில் ஏழை குடும்பங்களின் வருமானத்தில் 75% உணவுக்காக செலவிடப்படுகிறது. இச்சூழலில் சுமார் 9.12 கோடி இந்திய குழந்தைகளுக்கு பள்ளிகள் மூடி இருப்பதால் மதிய உணவு கிடைக்கவில்லை.

பொது முடக்க காலத்தில் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளது. இதனை நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று வழக்கறிஞர்கள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதி உள்ளார்கள். குழந்தைகளுக்கு பாதுகாப்பான இடமாக பள்ளிகள் இருக்கின்றது என இதன் மூலம் தெரியவருகிறது. கொரோனா நுண்கிருமி தீ தாக்கத்தால் ஏற்படுத்தப்பட்ட பொது முடக்கம் 4 லட்சம் புலம் பெயர்ந்த தொழிலாளர்களையும் அமைப்புசாரா துறையில் பணிபுரிவோரையும் பெரிதும் பாதித்துள்ளது. பலவாரி மனிதர்கள் வாழும் இந்தியாவில் கல்வி நிலையங்கள் இல்லாமல் தொழில் நுட்ப முறையில் தான் கல்வி என்ற நிலை ஏற்பட்டால் ஏழை, எளிய மக்களின் குழந்தைகள் பலர் பள்ளிக் கல்வியில் இருந்து விலக நேரிடும் என்பதை மிக மோசமான கசப்பான உண்மை. எனவே கல்வி விற்பனை சரக்கு இல்லை என்பதில் அரசு உறுதியாக இருக்க வேண்டும். அனைத்து பள்ளிகளும் அரசுடைமையாக்கப்பட வேண்டும். இந்தியர் அனைவருக்கும் ஒரே அளவிலான சமச்சீர் கல்வியை கொண்டு வர வேண்டும். மக்கள் கல்வி என்பது அறிவை அடைவதற்கு தானே அன்றி சம்பாதிப்பதற்கான கருவி இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

கல்வி இல்லாத சமூகம் காட்டுமிராண்டி சமூகம் என்பதை புரிந்து மகாகவி பாரதியின் கவிதையை உணர்ந்து அரசு செயல்பட வேண்டும்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப மலைப்பகுதி மற்றும் பழங்குடி மக்களுக்கான கல்வி, ஆன்லைன் தொடர்ந்து எட்டாக்கனியாகவும் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுகின்ற நிலையே தொடர்கிறது. இந்நிலை மாறவேண்டும்.

**- சி.பரமேஸ்வரி**

---

# "நீட் தீண்டாமை"

அனிதா எழுப்பியிருந்த கேள்விகள் :

✍ இங்கு எல்லோருக்கும் எல்லாமும் சரிசமமாகக் கிடைக்கின்றனவா?

✍ எல்லோருக்கும் ஒரே தரமான கல்வி கிடைக்கிறதா?

✍ எல்லோருடைய பொருளாதார நிலையும் ஒன்றுபோல இருக்கிறதா?

✍ இங்கு ஏற்றத்தாழ்வு எதுவும் இல்லையா?

✍ இங்கு யாருக்கும் எதுவும் சரிசமமாகக் கிடைக்காதபோது, அனைவருக்கும் ஒற்றைத் தேர்வு என்பது யாரை ஏமாற்றும் வேலை?

எனக்கு பெரிதாக அரசியல் புரிதல்கள் எல்லாம் இல்லை. அரசியல் எங்களுக்குத் தெரியும் என்பவர்கள், எனது இந்த எளிமையான கேள்விகளுக்குப் பதில் சொல்லட்டும் என்று அன்பு மகன் அனிதா நம் முன் வைத்த இந்த கேள்விகளுக்கு இன்றுவரை நம்மிடம் பதில் ஏதுமில்லை.

[ சமூக உயிரோட்டம் மாத இதழில் வெளியான *நீட் தீண்டாமை* (நடந்து வந்த பாதை) கட்டுரையிலிருந்து.. ]

# வட்டப் பேரவைகள்

## கிருஷ்ணகிரி

### சூளகிரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், சூளகிரி வட்டக் கிளை பேரவை 17.10.2020 அன்று சூளகிரியில் கொடியேற்றத்துடன் தொடங்கின. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை வட்ட தலைவர் எம்.சப்தமோகன் மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின்பேரவையை வட்டக் கிளை தலைவர் வி.சப்தமோகன் தலைமையேற்று நடத்தினார். அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட செயற்குழு உறுப்பினர் வாசித்தார். வட்ட துணைத் தலைவர் தனலட்சுமி வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணைத்தலைவர் மஞ்சுளா பேரவையை தொடங்கி வைத்து துவக்கவுரையாற்றிட, செயலாளர் அறிக்கையை செயலாளர் கனகவள்ளியும், வரவு - செலவு அறிக்கையை பொருளாளர் தினேசும் முன்மொழிந்தனர். அறிக்கைகள் மீதான விவாதத்தில் 9 பேர் கலந்துகொண்டனர். தொகுப்புரைக்குப்பின் அறிக்கைகள் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. பேரவையை வாழ்த்தி மாவட்ட நிர்வாகிகள் சி.கல்யாணசுந்தரம், ஜெகதாம்பிகா ஆகியோரும், சிறப்புரையாக மாவட்ட பொருளாளர் தேவராஜ் ஆகியோர் பேசினர். மாவட்ட செயலாளர் நடராஜன் நிறைவுரையாற்றினார். பேரவையில் சுகுமால் சென்பவன் கட்டட நிதி ரூ 35,000/-, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா 30க்கான தொகை ரூ 3,500/-,






2020ஆம் ஆண்டு உறுப்பினர் சந்தா ரூ 10,500/- மாவட்ட மையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த பேரவையில் 60 பெண்கள் உட்பட 72 பேர் கலந்துகொண்டனர்.

### கிருட்டினகிரி

கிருட்டினகிரி வட்டக் கிளை பேரவை 31.10.2020 அன்று கிருட்டினகிரியில் நடைபெற்றது. வட்டக் கிளை தலைவர் ஜி.வெங்கடேசன் தலைமை தாங்கினார். அரசு ஊழியர் சங்கக்கொடியை வட்ட தலைவர் ஜி.வெங்கடேசன் மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாவட்ட தலைவர் பி.சந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தியாகிகள் ஸ்தூபிக்கு மலரஞ்சலி செலுத்திய பின்பேரவை நிகழ்ச்சிகள் துவங்கின. வட்ட துணைத் தலைவர் கே.தேவன் வரவேற்புரையாற்ற, மாவட்ட பொருளாளர் வி.தேவராஜ் பேரவையை துவக்கி வைத்துப் பேசினார். எழுத்துப்பூர்வமான அறிக்கைகளை வழங்கி வட்ட செயலாளர் ஏ.மணி, வட்ட பொருளாளர் கே. பெருமாள் அவர்களும் முன்மொழிந்து பேசினர். தொகுப்புரைக்குப் பின் அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேரவையில் 17 தீர்மானங்களை கிளை நிர்வாகிகள் கிருஷ்ணன், சின்னசாமி, தமிழரசி முன்மொழிய ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. மாவட்ட நிர்வாகிகள் சி.கல்யாணசுந்தரம், ஜெகதாம்பிகா, மஞ்சுளா ஆகியோரும், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் சார்பாக கோபாலக்கண்ணன், பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்கத்தின் சார்பாக தினேஷ், சத்துணவு ஊழியர் சங்கத்தின் சார்பாக அன்பழகன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் சிறப்புரையாற்றிட, மாவட்டத் தலைவர் பி.சந்திரன் நிறைவுரையாற்றினார். கிருட்டினகிரி வட்டக் கிளை சார்பாக சுகுமால் சென் பவன் கட்டட நிதி ரூ 50,000/-, 2020ஆம் ஆண்டு உறுப்பினர் சந்தா நிலுவை ரூ 17,850/-, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா ரூ2,500/- மாவட்ட



மையத்திடம் வழங்கப்பட்டது. இறுதியாக மாவட்ட செயற்குழு உறுப்பினர் ராமசாமி நன்றி கூறி பேரவையை நிறைவு செய்தார். பேரவையில் 18 பெண் ஊழியர்கள் உட்பட 72 பேர் கலந்துகொண்டனர்.

**தேன்கனிக்கோட்டை**

வட்டக் கிளை பேரவை 30.10.2020 அன்று தேன்கனிக்கோட்டையில் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க கொடியை வட்ட செயலாளர் முருகேசன் மற்றும் சம்மேளனத்தின் கொடியை மாவட்ட செயலாளர் நடராஜன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். வட்ட இணைச் செயலாளர் சீனிவாசன் தலைமை தாங்கினார். கார்த்திக்ராஜா அஞ்சலி தீர்மானம் முன்மொழிந்தார். மாவட்ட இணைச் செயலாளர் சி.கல்யாணசுந்தரம் துவக்கவுரையாற்றினார். அறிக்கைகளை எழுத்துபூர்வமாக அனைவருக்கும் வழங்கி செயலாளர் முருகேசன், பொருளாளர் (பொ)சீனிவாசன் ஆகியோர் முன்மொழிந்து பேசினர். நான்கு தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். தொகுப்புரைக்குப் பின் அறிக்கைகள் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. வட்ட துணைத்தலைவர் வி.ராஜண்ணா 10 தீர்மானங்கள் முன்மொழிய, பேரவையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பேரவையை வாழ்த்தி முரளி, சி.திருநாவுக்கரசு, உ.சம்சுல் ஆலம், கதிரவன் ஆகியோர் பேசினர். மாவட்ட இணைச்செயலாளர் ஜெகதாம்பிகா சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் நடராஜன் நிறைவுரையாற்றினார். தேன்கனிக்கோட்டை வட்டக்கிளை சார்பாக சுகுமால் சென் பவன் கட்டட நிதி ரூ 35,000/-, 2020ஆம் ஆண்டு உறுப்பினர் சந்தா ரூ 14,000 /-, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா ரூ 5,000|-மாவட்ட மையத்திடம் வழங்கப்பட்டது. இறுதியாக சி.திருநாவுக்கரசு நன்றி கூறி பேரவையை நிறைவு செய்தார். பேரவையில் மூன்று பெண்கள் உட்பட 34 பேர் கலந்துகொண்டனர்.

## ஓசூர்

ஓசூர்வட்டக் கிளை பேரவை 30.10.2020 அன்று ஓசூரில் நடைபெற்றது. பேரவை நிகழ்ச்சிகள் கொடியேற்றம், தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி என்று சங்க பாரம்பரியத்துடன் துவங்கியது. வட்ட தலைவர் வி.சிவா தலைமை தாங்கினார். வட்ட துணைத்தலைவர் ஆண்டனிராஜன் அஞ்சலி தீர்மானம் முன்மொழிந்தார். வட்ட துணைத் தலைவர் முருகன் வரவேற்புரையாற்றினார். முன்னாள் மாவட்ட செயலாளர் சி.பி.ஜெயராமன் பேரவையை துவக்கிவைத்துப் பேசினார்.

அறிக்கைகளை எழுத்துப்பூர்வமாக அனைவருக்கும் வழங்கி வட்ட செயலாளர் திம்மராஜ், வட்ட பொருளாளர் (பொ) சுரேஷ்குமார் அவர்களும் முன்மொழிந்து பேசினர்.




உறுப்பினர்களின் விவாதத்திற்குப் பின் அறிக்கைகள் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பேரவையை வாழ்த்தி மாவட்ட துணைத்தலைவர் ஜெயலட்சுமி, முன்னாள் மாவட்ட துணைத்தலைவர் சந்திரசேகரன், சூளகிரி வட்ட பொருளாளர் தினேஷ் ஆகியோர் பேசினர். வட்ட இணைச்செயலாளர் மதியழகன் 14 தீர்மானங்களை முன்மொழிய பேரவையில் ஒரு மனதாக நிறைவேறியது. மாவட்ட பொருளாளர் தேவராஜ் சிறப்புரையாற்றிட, மாவட்ட தலைவர் சந்திரன் நிறைவுரையாற்றினார். ஒசூர் வட்டக் கிளை சார்பாக சுகுமால் சென் பவன் கட்டட நிதி ரூ 50,000/-, 2020ஆம் ஆண்டு உறுப்பினர் சந்தா நிலுவை ரூ 9,750/-, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா ரூ 5,000/- மாவட்ட மையத்திடம் வழங்கப்பட்டது. விஜயா நன்றி கூறி பேரவைய நிறைவு செய்தார். பேரவையில் 47 பெண்கள் உட்பட 98 பேர் கலந்துகொண்டனர்.

## தருமபுரி

### நல்லம்பள்ளி

நல்லம்பள்ளி வட்டகிளை பேரவை ஊராட்சி ஒன்றிய கூட்டரங்கில் நடைபெற்றது. வட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் என்.யாரப்பாஷா வரவேற்றார். மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் பேரவையினை துவக்கி வைத்து பேசினார். வட்ட செயலாளர் பி.பிரபாகரன் செயலாளர் அறிக்கை வசித்தார். வட்டபொருளாளர் ஆர்.சதாசிவம் நிதிநிலை அறிக்கை வாசித்தார். மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி வாழ்த்தி பேசினார். வட்டதுணைதலைவர் மதலைமுத்து வட்ட இணை



செயலாளர் பராசக்தி ஆகியோர் தீர்மானத்தை முன்மொழிந்தனர்.மாவட்ட செயலாளர் ஏ.சேகர் நிறைவுறையாற்றினார். வட்ட மகளிர் அணி துணைக்குழு அமைப்பாளர் பி.மகேஸ்வரி நன்றி கூறினார்.

**காரிமங்கலம்**



சங்கத்தின் வட்ட பேரவை சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. தலைமை முருகேசன் (வட்ட தலைவர்), வரவேற்புரை சின்னசாமி (வட்ட துணைத் தலைவர்) துவக்கவுரை புகழேந்தி (மாவட்டப் பொருளாளர்), செயலாளர் அறிக்கை சி.முனிரத்தினம் (வட்டச் செயலாளர்), வாழ்த்துரை குணசேகரன் (மாவட்ட இணைச் செயலாளர்), நாகராணி (மாவட்ட இணைச் செயலாளர்) மற்றும் இந்துமதி (ஊரக வளர்ச்சித் துறை). நிறைவுரை ஏ.சேகர் (மாவட்டச் செயலாளர்). இறுதியாக நன்றி உரை தேவகி (மாவட்ட செயற்குழு உறுப்பினர்).

## விழுப்புரம்

சங்கராபுரம் வட்டக் கிளை வட்டபேரவை 16.10.2020 மாலை 4.30 மணியளவில் வட்டாட்சியர் அலவலக கூட்ட அரங்கில் வட்ட துணைத் தலைவர். பாசில் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் சங்க கொடியை ஏற்றி வைத்து துவக்கவுரை யாற்றினார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் காஞ்சனா மேரி வரவேற்று பேசினார். வட்ட செயலாளர் வெங்கடேசன் செயலாளர் அறிக்கையும், வி.பாலா நிதிநிலை அறிக்கையும் சமர்பித்தனர், மாவட்ட பொருளாளர் சிறப்புரையாற்றினார், ஜேம்ஸ் தீர்மானங்கள் முன்மொழிந்தார், மாவட்ட துணைத் தலைவர் வீரபுத்திரன், மாவட்ட இணை செயலாளர் சாமிதுரை, ஷபி மாவட்ட செயலாளர்



TNGAPA, ஜாகீர் உசேன் மாவட்ட துணைத் தலைவர் TNPTF, பொன்னுசாமி ஓய்வூதியர் சங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தோழமை சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர், மாவட்ட தலைவர் அனந்தகிருஷ்ணன் நிறைவுரையாற்றினார், இறுதியில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட வட்ட தலைவர் காஞ்சனா மேரி நன்றி கூறினார். இதில் 15 பெண்கள் உட்பட 40 பேர் கலந்து கொண்டனர்.

## நாகப்பட்டினம்

மயிலாடுதுறை வட்டப் பேரவை 31.10.2020 அன்று வருவாய்த் துறை அலுவலர் சங்க கட்டடத்தில் வட்டத் தலைவர் என்.ஜி.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. சங்கக் கொடியினை மாவட்டத் தலைவர் இளவரசன் ஏற்றி வைத்தார். வட்ட இணைச் செயலாளர் சிங்காரவேலன் வரவேற்புரையாற்றினார். JAC பொதுச் செயலாளர் ராயர் துவக்கவுரையாற்றினார். வட்டச் செயலாளர் ஆர்.சிவபழனி வேலை அறிக்கையும், பொருளாளர் ஜி.அருண்ஜோஷி வரவு செலவு அறிக்கையும் சமர்ப்பித்தனர்.

TNGPA சங்கத்தின் பழனிவேல், துறைவாரி சங்க நிர்வாகிகள் ஆர்.கமலநாதன், எம்.செல்வராஜ், தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தன் கி.ராஜகுமாரன், ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் எஸ்.தேன்மொழி, சி.வாசுகி, செ.தென்னரசு, ஆர்.கலா ஆகியோர்



வாழ்த்துரை வழங்கினர். கே.ரஜினி, ஜார்ஜ் ஆகியோர் தீர்மானங்கள் முன்மொழிந்தனர். மாவட்டத் தலைவர் து.இளவரசன் நிறைவுரை யாற்றினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.மதிமாறன் நன்றி கூறினார். ❖

# அடைகாத்த பெருங்கனவு

**மை** டியர் காம்ரேட்,

உங்களிடம் நான் இப்போது ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். உங்களிடம் இருப்பதிலேயே விலை மதிப்பற்றது எது? உங்களிடமிருந்து எதை எடுத்துவிட்டால் நீங்கள் வெறுமையாக மாறி விடுவீர்கள்?

நீங்கள் யோசிக்கும் பதில், உங்கள் அருமை மகளாக இருக்கலாம், அன்பு மனைவியாக இருக்கலாம், ஆருயிர் பெற்றோராக இருக்கலாம், அருமைக் காதலியாக/ காதலராகக்கூட இருக்கலாம். ஆனால் நம்மில் யாரேனும் நமக்கு வரும் கனவையோ, நமக்குள் இருக்கும் கனவையோ பதிலாக சொல்வோமா?

மார்ட்டின் லூதர் கிங் சொல்கிறார் "என்னிடம் இருப்பதிலேயே விலை மதிப்பற்றது எது? என்னிடமிருந்து எதை எடுத்துவிட்டால் நான் வெறுமையாகிவிடுவேன் என்று கேட்டால் தயங்காமல் சொல்வேன் "என் கனவு" ஒரே ஒரு கனவு. நினைவு தெரிந்த நாள் முதல் இன்றுவரை அதோடு சேர்ந்து நானும் வளர்ந்து வருகிறேன். அந்தக் கனவுதான் என்னை நிறைவு செய்கிறது."

மார்ட்டின் லூதர் கிங் சொன்னதைக் கேட்டு ஆச்சர்யமுற்றுப் போனேன் நான். அப்படி என்னதான் கனவு அவருக்கு இருந்தது? அதை அறியும் ஆர்வம் ஏற்பட்டு அடுத்தடுத்த பக்கங்களைப் புரட்டினேன். லூதர் கிங் தன்னுடைய கனவைச் சொல்ல ஆரம்பித்தார்,

"அது ஒரு பெரிய நகரம் மாலை நேரம். வீட்டிலிருந்து கிளம்புகிறேன். என் மனதுக்கு பிடித்த பாடலை அசைபோட்டபடி. நடந்து ஒரு பெரிய பூங்காவிற்குள் நுழைகிறேன். வேலைப்பாடுகள் செய்த இரும்பு பெஞ்சில் அமர்ந்து கொண்டு கையில் வைத்திருந்த புத்தகத்தைப் பிரித்து ஆனந்தமாக வாசிக்கிறேன். வானில் நட்சத்திரங்கள் தோன்றும் வரை, பறவைகள் கூடு வந்து சேரும் வரை, முதல் மழைத்துளி என் மீது விழும்வரை வாசித்துக் கொண்டே இருக்கிறேன். மனம் லேசானது போல் இருக்கிறது. பூங்காவிலிருந்து வெளியே வருகிறேன். அந்தப்பக்கமாக செல்லும பேருந்து என் வருகையைக் கண்டு வேகம் குறைத்து என்னை ஏற்றிக்கொள்கிறது. டிக்கட் வாங்கி எனக்கு பிடித்த திரையரங்கிற்கு அருகில் இறங்கிக் கொள்கிறேன். படத்திற்கு டிக்கெட் வாங்கி இருக்கையில் சென்று அமர்கிறேன். நிதானமாக முழுபடத்தையும் ரசிக்கிறேன். படம் முடிந்ததும் வெளியில்



வருகிறேன். ஒரு நல்ல சட்டையை எடுத்தால் என்ன என்று தோன்றுகிறது. அருகில் உள்ள ஒரு பெரிய அடுக்குமாடிக் கட்டிடத்திற்குள் நுழைகிறேன். கண்ணாடிக் கதவைத் திறந்து சீருடை அணிந்த பணியாளர் சல்யூட் அடித்து என்னை வரவேற்கிறார். கடைக்குள் கொஞ்ச நேரம் அங்குமிங்கும் சுற்றிவிட்டு எனக்கு பிடித்த ஒரு சட்டையை எடுத்து அளவு சரியாக இருக்கிறதா என்று அணிந்து பார்த்துக் கொள்கிறேன். பணம் செலுத்தி சட்டையை பெற்றுக்கொண்ட பின் நன்றி மீண்டும் வருக என்று கடை முதலாளி சொல்கிறார். பாடலை முணுமுணுத்தபடி உற்சாகத்தோடு வெளியில் வந்து பக்கத்திலிருந்த ஒரு ஓட்டலுக்குள் நுழைகிறேன். என்னை நோக்கி வந்த சர்வரிடம் ஒரு கோப்பையில் சுடச்சுட தேநீர் கிடைக்குமா என்று கேட்கிறேன். அமருங்கள் ஐயா இதோ கொண்டு வருகிறேன் என்று பணியாளர் விரைகிறார். மீண்டும் புத்தகத்தை எடுத்து அடுத்த சில பாராக்கள் படிக்கிறேன். தேநீர் வருகிறது. மெதுவாக அருந்துகிறேன். மனம் முழுக்க இனம்புரியாத மகிழ்ச்சி. கோப்பையை கீழே வைக்கும்போது ஒரு குழந்தை என் கண்களைப் பார்த்து புன்னகை செய்கிறது.நான் கையை நீட்டுகிறேன். குழந்தை நெருங்கி வந்து என் விரல்களைப் பற்றிக் கொள்கிறது. மிருதுவான அதன் வெள்ளை விரல்களை வருடிக் கொடுக்கிறேன். கனவு நிறைவடைகிறது.''

லூதர் கிங்கின் கனவு இவ்வளவுதானா? இது மிகவும் ஒரு சாதாரண கனவல்லவா? நடப்பதும், அமர்வதும், படிப்பதும், படம் பார்ப்பதும் தேநீர் அருந்துவதும் இயல்பான நிகழ்வுகளல்லவா? என்று நான் கேட்க நினைப்பதற்குள் அவர் முந்திக் கொள்கிறார்.

“நீங்கள் கேட்கலாம் இது இயல்பான கனவுதானே என்று. ஆனால் இதில் எது ஒன்றும் எனக்கும் என் மக்களுக்கும் இயல்பானவை அல்ல. என் இதயத்திற்குள் பொத்தி வைத்து நான் சுமந்து கொண்டிருப்பது மார்ட்டின் லூதர் கிங் எனும் தனிப்பட்ட மனிதனின் கனவல்ல. வெள்ளையர்களால் அடிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டுள்ள ஓட்டுமொத்த கறுப்பின மக்களின் நூற்றாண்டுகால பெருங்கனவு. இந்தக் கனவில் கண்ட ஒவ்வொரு நிகழ்வும் ஒரு அதிசயம், ஒவ்வொன்றும் ஏக்கம், இவை ஒவ்வொன்றும் நிறைவேறாத ஆசைகள்.''

''.............................................''

“நான் எனக்கு விருப்பப்பட்டது எதுவும் செய்ய முடியாது. பூங்காவிற்குள் நடந்து செல்ல முடியாது. இது உன் இடமில்லை என்று வெளியில் பிடித்துள் தள்ளுவார்கள். பேருந்தில் என் விருப்பத்திற்கு ஏற முடியாது. ‘உன் வண்டியில் ஏறிக் கொள்’ என்பார்கள். எனக்குப் பிடித்த திரைப்படத்தை எனக்குப் பிடித்த இடத்தில் அமர்ந்து பார்க்க முடியாது. உன் இடத்துக்குப் போ என்பார்கள். என் இடம் என்பது முக்கியத்துவமற்றதாக இருக்கும். கண்ணாடிக்கதவைத் திறந்து ஒருவரும் என்னை கடைகளுக்குள் அனுமதிக்க மாட்டார்கள். மீறி நான் உள்ளே போனாலும் இங்கே உனக்கென்ன வேலை என்று சீறுவார்கள். நீயாக வெளியில் போகிறாயா அல்லது பாதுகாப்பு அதிகாரியிடம் சொல்லி வெளியில் தள்ளட்டுமா? ஏன்று விழிகளை உருட்டுவார்கள். அப்படியே பிரிக்காமல் உடைகளை எடுப்பதானால் எடு, அணிந்து பார்க்க அனுமதியில்லை என்று கையிலிருநது பிடுங்குவார்கள். தேநீர் இருக்கிறது, ஆனால் உனக்குக் கிடையாது என்று கைவிரிப்பார்கள். அதனால்தான் நான் கனவு காண்கிறேன். அந்தக் கனவில் எனக்கான வீதி, எனக்கான இசை, எனக்கான புத்தகம், எனக்கான கவிதை, எனக்கான தேநீர், எனக்கான பறவை, எனக்கான வானம், எனக்கான நட்சத்திரம் என்று எதுவொன்றும் எனக்காக தனியாக ஒதுக்கப்பட்டிருக்காது. அது எல்லோருக்குமானதாக இருக்கும். என் கனவில் என்னால் இயல்பாக இருக்க முடியும், ஒரு அமெரிக்கனாக, ஒரு கிறித்தவனாக, ஒரு மனிதனாக ஒரு இயல்பான உயிரினமாக என்னால் என் கனவில் வாழ முடியும்.

என் கனவில் வெள்ளை அமெரிக்கா கறுப்பு அமெரிக்காவின் முன் மண்டியிட்டு அமர்ந்து தன் நூற்றாண்டு கால தவறுகளுக்கு மன்னிப்பு கோரும். கறுப்பு அமெரிக்கா கீழே குனிந்து வெள்ளை அமெரிக்காவின் தோளைத் தொட்டு உயர்த்தி “வா இங்கே” என்று நெஞ்சோடு அணைத்துக் கொள்ளும். என் கனவில் ஒரு வெள்ளை மனிதன் எழுந்து நின்று கறுப்பு பெண்ணுக்கு பேருந்தில் இருக்கையை விட்டுக் கொடுப்பார். என் கனவில் ஒரு சிறுமி அப்பாவின் வெள்ளை விரல்களையும் அம்மாவின் கறுப்பு விரல்களையும் பற்றியபடி நடைபழகும், என் அமெரிக்கா வெள்ளையும் கறுப்புமாக பிரிந்திருக்காது. அது இரண்டும் ஒன்றுகலந்த அமெரிக்காவாக இருக்கும். இதுதான் என் கனவு இது ஒரு தனிப்பட்ட மனிதனின் கனவல்ல ஒட்டுமொத்த கறுப்பின மக்களின் கனவு. எது ஒன்றை செயல்படுத்த முடியுமோ அது ஒன்றை மட்டுமே நான் கனவு என்று அழைப்பேன்.'' என்கிறார் மார்ட்டின் லூதர் கிங்.

1963ல் “வேலையும் சுதந்திரமும் வேண்டி வாஷிங்டனுக்கு பேரணி” என்ற மிகப்பெரிய பேரணியில் திரண்ட மக்கள் வெள்ளத்தின் முன் மார்ட்டின் லூதர் கிங் பேசிய பேச்சுதான் இது. அமெரிக்காவில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக ஒடுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்த கறுப்பின மக்களின் விடுதலைக்கான கனவு அது. மார்ட்டின் லூதர் கிங் முன்னெடுத்த போராட்டத்தின் பலனாக 1965ஆம் ஆண்டு கறுப்பினத்தவர்களுக்கு ஓட்டுரிமை அளித்தது அமெரிக்கா அரசாங்கம். அதன்பிறகு கறுப்பினத்தர்வகளும் வெள்ளையினத்தவர்களும் சமம் என்பதை பிரகடனப்படுத்தும் மனித உரிமைச் சட்டத்தை அமெரிக்கா நிறைவேற்றியது. மார்ட்டின் லூதர் கிங்கின் கனவு நிறைவேறியது.

காம்ரேட், இப்போது முதலில் கேட்ட கேள்விக்கு வருவோம். அந்தக் கேள்வியை இப்போது கொஞ்சம் மாற்றிக் கேட்கிறேன். “அரசு ஊழியர்களே உங்களிடம் இருப்பதிலேயே விலை மதிப்பற்றது எது? உங்களிடமிருந்து எதை எடுத்துவிட்டால் நீங்கள் வெறுமையாக மாறி விடுவீர்கள்?”


இதற்கான பதில் “நமது உரிமைகள்”தான். நம்மிடம் இருப்பதிலேயே விலைமதிப்பற்றது நமது உரிமைகள்தான். நம்மிடமிருந்து அரசாங்கங்கள் அதை ஒவ்வொன்றாக பிடுங்கி எறியத் துடிக்கின்றன. உரிமைகளற்றுப் போனால் நாம் அனைவரும் உயிரற்ற சடலங்கள்தான். எனவே. நம்முடைய முன்னோடிகள் குருதி சிந்தி பெற்றுத்தந்த உரிமைகள் பறிக்கப்படாமல் உறுதியோடு காப்போம். அவர்கள் அடைகாத்து மெய்ப்படுத்திய பெருங்கனவை நாம் போற்றிப் பாதுகாப்போம். நாம் தவறவிடும் ஒவ்வொரு உரிமையும் அரசு ஊழியர் இனத்தை அடிமையாக்கிவிடும் என்பதை மறவாமல் நினைவில் கொள்வோம்.

**ஜிஜி**

# மாபெரும் புரட்சியின் நாயகன்

அகிலத்தையே அதிரவைத்த மாபெரும் புரட்சியை நிகழ்த்திய அந்த மனிதனின் முகம் காண தொழிலாளர்களும், விவசாயிகளும் படைவீரர்களும் துடித்துக்கொண்டிருந்தபோது தனது மாறுவேடத்தை கலைத்து மக்கள் மேடையில் ஏறிய அவர் இப்படித்தான் இருந்தார். உருவத்தில் குள்ளமாகவும், தலை பெரிதாகவும் அதில் முடியே இல்லாமலும் இருந்தது. சிறிய கண்களும் சிறிய மூக்கும் வாய் பெரியதாகவும் இருந்தது. உடையில் நாகரிகம் இல்லை, அவர் மீது எந்த ஈர்ப்பும் மக்களுக்கு தோன்றாது. இவரது பேச்சில் நகைச்சுவை இல்லை, கர்ஜனையோ முழக்கங்களோ இல்லை. ஆனால் பிடிவாதகாரனுக்கு இருப்பது போல் தாடி இருந்தது. நடைமுறை சாதுர்யங்களுடன் ஈடு இணையில்லாத சாகச மூளை கொண்ட அகிலம் போற்றும் அக்டோபர் புரட்சியின் நாயகனாக அபூர்வ தலைவனாக தனது அறிவாற்றலினால் மக்கள் தலைவனாக திகழ்ந்தவர். அவர் தனது உருவத்தால் அல்ல உள்ளத்தால் மக்களின் நாயகன் ஆனார். இவர்தான் உலக புகழ்பெற்ற ரஷ்யாவின் அக்டோபர் புரட்சிக்கு தலைமை தாங்கி வெற்றி பெற்ற புரட்சியின் நாயகன் மாவீரர் விளாடிமீர் லெனின்.

மாமேதை மார்க்ஸின் மூலதனம் நூலை லெனினுக்கு முன்னால் கையிலெடுத்தவர் அவரது அண்ணன் அலெக்ஸாண்டர். நாட்டு விடுதலையே தனது லட்சியமாக கொண்ட இவரை ஜார் மன்னர் ஆட்சியை கவிழ்க்க சதி செய்ததாக கைது செய்து 1888 ஆம் ஆண்டு மே மாதம் 8ம் தேதி தூக்கிலிட்டபோது லெனினுக்கு வயது 17. விளாடிமீரின் கண்கள் சிவந்தன. "அவர்கள் இதற்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்" என்று சபதமிட்டார். 1892 ல் ஸமாராவில் பெரும் பஞ்சம் ஏற்பட்டபோது "பஞ்சம் ஏற்படுவதற்கு மூல காரணம் சமூக அமைப்புதான். அது மாறாதவரை பஞ்சமும் பட்டினியும் ஆண்டுதோறும் ஏற்படவே செய்யும் பட்டினி கிடப்பவர்களுக்கு உணவளிப்பது நம் அறிவாளி வர்க்கத்திற்கே உரிய இயல்பான போலி மனப்பான்மையையே காட்டுகிறது" என்று லெனின் தனது முதல் குரலை எழுப்பினார். 1895ல் பெரியோர் சங்கத்தின்




தலைவரானார் லெனின். தொழிற்சாலை ஒன்றின் தொழிலாளர்களுக்காக தனது முதல் பிரகடத்தை எழுதினார். "டுலீன்" என்ற புனைப்பெயரில் மார்க்ஸிய கருத்துக்களை விளக்கி பல கட்டுரைகளை எழுதத்தொடங்கினார். அவரது நடவடிக்கைகளை கண்காணித்த இரகசிய காவலர்களால் 1895 டிசம்பர் 20ம் தேதி கைது செய்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சிறையில் அடைத்தனர். லெனின் சிறையிலிந்தபோதே அவரை தலைவராக கொண்டு தொழிலாளர் விடுதலை லீக் என்ற நிறுவனம் தொடங்கப்பட்டது. செயிட்ன்ட் பீட்டர்ஸ்பர்க் சிறையில் இருந்த 16 மாதங்களில் பஞ்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை பற்றிய சிறிய நூலையும் "ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி" என்ற பெரிய நூலையும் எழுதினார். பின்னர் விடுதலை செய்யப்பட்ட லெனினை 1897ல் சைபீரியாவுக்கு நாடு கடத்தினர். நாதெஸ்தா குருப்ஸ்காயா என்பவரும் சைபீரியாவுக்கு 1898ல் நாடு கடத்தப்பட்டு வந்திருந்தார். இயக்கப்பணிகளில் அறிமுகமாகினர். தன்னை போலவே சிந்தித்த மார்க்ஸியவாதியான நாதெஸ்தா குருப்ஸ்காயாவை லெனின் காதலித்தார். சூசென்ஸோ கிராமத்தில் தங்கியிருந்தபோது இருவரும் திருமணம் செய்து கொண்டனர். நாதெஸ்தா குருப்ஸ்காயா தனது கணவர் லெனின் எழுதிவந்த புத்தகங்களுக்கு நகல் எடுத்தல், கடிதங்களை கோப்பில் போடுதல், பதில் எழுதுதல் போன்ற பணிகளை செய்து விளாடிமிருக்குச் செயலாளராகவே பணியாற்றினார்.

*1900 மே மாதம் லெனின், மார்ட்டோவ், பொட்ரஸோவ் ஆகிய மூவரின் ரகசிய ஆலோசனையின்படி "தீப்பொறி" என்ற பெயரில் வெளிநாட்டிலிருந்து ஒரு பத்திரிக்கை வெளியிடுவது என்று முடிவு செய்தனர். தீப்பொறி பத்திரிக்கையை அச்சிட்டுத்தர ஜெர்மன் சமூக ஜனநாயகக்கட்சி ஒப்புக்கொண்டது. 1900 டிசம்பர் 21 ஆம் தேதியன்று தீப்பொறி பத்திரிக்கை யின் முதல் இதழ் வெளிவந்தது. இதை ரஷ்யாவுக்கு கடத்திச்சென்று வினியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தலைமறைவு புரட்சியாளர்கள் மூலம் இரகசியமாக அச்சடித்து இரகசியமாக விநியோகித்து பொது மக்கள் மாணவர்கள், மட்டுமின்றி இராணுவ முகாம்களுக்கும் எடுத்துச் சென்றது தீப்பொறி ஏஜென்ட்டுகளாக இருந்த கட்சி உறுப்பினர்களே அதன்பிறகு "புதுவாழ்வு இதழ்", "உண்மை இதழ்" மற்றும் "சமூக ஜனநாயகவாதி" என்ற இதழையும் தொடங்கினார். இந்த நான்கு இதழ்களும் தான் லெனின் பலநூறு கட்டுரைகளை தாங்கி ரஷ்யாவுக்குள் கொண்டு செல்லும் வாகனமாக வெளிவந்து மகத்தான ரஷ்ய புரட்சிக்கு வித்திட்டது.*

*1903ம் ஆண்டு முதல் 1905ம் ஆண்டுவரை ரஷ்யாவில் தொழிலாளர், விவசாயிகள் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நாடு முழுவதும் வேகம் எடுத்தது வறுமை, பஞ்சம், தொழிலாளர்கள் வேலையிழப்பு, சம்பளக்குறைப்பு போன்றவற்றிற்காக போராட்டங்கள் வெடித்தன. அப்பொழுது "இனிநாம் செய்ய வேண்டியது என்ன"" என்ற புகழ்பெற்ற நூலை எழுதினார். கட்சித் தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும் உள்ள தொடர்பும் புரட்சி எண்ணம் கொண்டவர்களுக்கும் பாமர மக்களுக்குத் உள்ள உறவும் பற்றி விவரமாக இந்நூலில் எழுதினார். அவரை பின்பற்றுவோரின் வேத நூலாக அது மாறியது. போராட்டங்களை தூண்டியது லெனின்தான் என்று கூறி நாடுகடத்தினார்கள். 1905 முதல் ஒன்பது ஆண்டுகாலம் வரை தலைமறைவாக இருந்துகொண்டே லெனின் சோவியத் புரட்சிக்கு அடித்தளம் அமைத்தார்.*

*மக்களை தத்துவார்த்த அடிப்படையில் போராட்ட களத்தில் ஒன்று சேர்த்தார் லெனின். ஆயுதப் போராட்டத்தையும், அரசு நிறுவனங்களை கைப்பற்றுவதையும் மிகமிக இறுதிக் கட்டத்தில்தான் கையில் எடுத்தார். ரஷ்ய பாராளுமன்றத் தேர்தலில் போலஷ்விக்குகளை போட்டியிட அனுமதி தந்தார். ஜார் மன்னரை எதிர்க்கும் அனைத்து தரப்பினரையும் சேர்த்துக்கொண்டு போராடினார். பின்னர் பட்டாளிகளை மட்டும் சேர்த்துக்கொண்டு மற்றவர்களை புறந்தள்ளினார். இப்படி தனது அனுபவ அறிவின் மூலம் தியரியை உருவாக்கி நடைமுறைப்படுத்தியவர் லெனின். "அவர் பேசும் போது பேசுவது போல் இல்லை வரலாறு ஆணையிடுவதுபோல் இருக்கும்" என்கிறார் கார்க்கி. லெனினின் எளிமையும் இனிமையும் தான் புரட்சியின் அடையாளமாக மாறியது. உலகப்புகழ் பெற்ற (அக்டோபர் புரட்சி) நவம்பர் புரட்சியை நிகழ்த்தி சோவியத் சோசலிச அரசை நிலைநிறுத்தி எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்க அரும்பாடுபட்ட உலக மகா புரட்சி வீரர் லெனின் தலைமையில் அமைந்த புதிய அமைச்சரையில் (மக்கள் கமிசார்) எழுச்சிப்பாடல் எல்லோராலும் பாடப்பட்டது.*

**"அடிமைத் தளையும் பசியும் வதைக்க**
**கொடுந்துயரில் உழலும் உலகே எழுவாய்!**
**புதுமைச்சேர் உலகினை நாம் படைப்போம்**
**ஏதுமற்றோர் இனி எல்லாம் ஆவர்.**

*சனாதனிகளின் சிம்ம சொப்பனமாக விளங்கிய லெனினின் சிலை கூட பாஸிஸத்தை குலைநடுங்கவைக்கும். ஆம் இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் கடந்த சட்டமன்ற தேர்தலில் வென்ற பஜக அரசு ஆட்சி பொறுப்பேற்றவுடன் புரட்சி வீரர் லெனின் சிலையை அகற்றி பாதக செயலை செய்தது. மடமைகளுக்கு என்ன தெரியும் நீங்கள் லெனினின் சிலையை தற்காலிகமாக அகற்றியிருக்கலாம் ஆனால் அவரின் புரட்சிகர சித்தாத்தந்தம் உலகம் முழுவதும் நிரம்பியிருக்கும்.*

\- **தெ.வாசுகி**

## இரங்கல்



*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திண்டுக்கல் மாவட்ட ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான எம்.கே. என்று அழைக்கப்படும் தோழர் மு.கிருட்டினன் 11.10.2020 அன்று மாரடைப்பால் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் மறைவுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மையம் ஆழ்ந்த இரங்கலையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது.*

# ஆறு நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக ஆதிக்கம் செலுத்திய ஒட்டோமான் பேரரசு முடிவுக்கு வந்த நாள் நவம்பர் 1




அனடோலியா என்றும், ஆசியா மைனர் என்றும் அழைக்கப்பட்ட தற்போதைய துருக்கி அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் இணைந்ததன் வடமேற்குப் பகுதியில் 1299இல் துருக்கிய வம்சத்தைச் சேர்ந்த உஸ்மான் பே (ஒட்டோமான்) என்ற சுல்தானால் இந்த அரசு உருவாக்கப்பட்டது. முதலாம் உஸ்மானின் மறைவுக்குப் பின் வந்த நூற்றாண்டில் உதுமானிய ஆட்சி கிழக்கு மத்திய தரைக் கடல் மற்றும் ஃபல்கேன் வழியாக விரிவடைய ஆரம்பித்தது. உஸ்மானின் மகன் உர்தான் 1324-ல் பூர்சா நகரை கைப்பற்றியதுடன் அதை உதுமானிய மாநிலத்தில் புதிய தலைநகராக மாற்றினான். முக்கிய நகரான தெஸ்சாலுன்கி 1387-ல் வெனேடியன்களிடம் இருந்து கைப்பற்றப் பட்டது. 1381-ல் கோசோவே உதுமானியர்களால் வெற்றி கொள்ளப்பட்டதன் மீது பிராந்தியத்தின் மீதான செர்பியர்களின் அதிகாரம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதுடன் இது உதுமானியர்கள் ஐரேப்பாவில் தடம் பதிக்கும் காரணமாக அமைந்தது. 1396ல் திகழ்ந்த நிகோபொலிஸ் போரில் மத்திய காலத்தில் சிறுவைப்படை எனக் கருதப்படும் பெரும் படையினரால் துருக்கிய உதுமானியர்களின் வெற்றியைத் தடுக்க முடியவில்லை இரண்டாம் முராத் என்பவரின் மகனான இரண்டாம் முகம்மத் ஆட்சிப் பிரதேசத் தையும் இராணுவத்தையும் மறு சீரமைத்ததுடன் 1453 அன்று கான்ஸ்டண்டினோப்பிள் நகரைக் கைப்பற்றினான். இதனைப் பேரரசு ஆக்கினார்.

இப்பேரரசு உச்சத்திலிருந்த 15,16 நூற்றாண்டு களில் ஐரோப்பியக் கண்டத்தின் மிகக் கணிசமான பகுதிகளுடன் ஆசியா, ஆப்ரிக்கா என்று மூன்று கண்டங்களில் பரவியிருந்தது. தனது வரலாறு முழுவதும் விரிவாக்கத்தையும். பின்னர் சுருக்கத்தையும் சந்தித்து வந்ததுடன் ஏராளமான படுகொலைகளுக்கும் காரணமாக இருந்தது ஒட்டோமான் பேரரசு. 17-ம் நூற்றாண்டுகளில் சுலைமான் மகத்துவத்தின் ஆட்சியின் கீழ் அதன் அதிகாரத்தின் உச்சத்தில், ஒட்டோமான் பேரரசு ஒரு பன்னாட்டு, பன்மொழி சாம்ராஜ்யமாக இருந்தது. இது தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதி, மத்திய ஐரோப்பாவின் சில பகுதிகள், மேற்கு ஆசியா, கிழக்கு ஐரோப்பாவின் சில பகுதிகள், மற்றும் காகசஸ், வடஆப்பிரிக்க மற்றும் ஆப்பிரிக்காவின் கொம்பு. 17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பேரரசில் 32 மாகாணங்களும் ஏராளமான வாஸஸ் மாநிலங்களும் இருந்தன.

1876ல் பல்கேரிய எழுச்சியை ஒடுக்கிய பாசி பசூக் என்னும் முறைப்படுத்தப்படாத ஒட்டோ மான் படைகள் சுமார் ஒரு லட்சம் பேரைக் கொலை செய்தன. 1894-96ல் நடைபெற்ற ஹமீதியப் படுகொலைகளில் சுமார் 3 லட்சம் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். 1915ல் ஆர்மீனியாவுக்குள் ரஷ்யப் படைகள் நுழைய ஒத்துழைப்பு அளித்ததால், சுமார் 23 லட்சம் ஆர்மீனியர்களை ஒட்டோமான் பேரரசு கொலை செய்தது. ஒட்டோமான் தற்கால துருக்கியாக மாறியபின் இதை இனப்படுகொலை என்று அழைப்பதை ஏற்காவிட்டாலும் சுமார் 20 நாடுகள் அவ்வாறே குறிப்பிடுகின்றன. 20ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய இனப்படுகொலை என்று போப் ஃபிரான்சிஸ் இதைக் குறிப்பிட்டார். ஒட்டோமான் பேரரசின் ஆட்சியில் 1821-1922 காலத்தில் பால்கள் பகுதியில் மட்டும் பல பத்து லட்சம் முஸ்லிம்கள் பலியானதாக அமெரிக்க வரலாற்றாளர் ஜஸ்டின் மெக்-கார்த்தி குறிப்பிடுகிறார். 1908-ல் துவங்கிய இளம் துருக்கியர் புரட்சி, ஒட்டோமான் பேரரசின் கலைப்புக்கு இட்டுச் சென்றது.

1299-லிருந்து ஆறு நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக ஆதிக்கம் செலுத்திய ஒட்டோமான் பேரரசு முடிவுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து கடைசி சுல்தானான ஆறாம் மெஹ்மெத் நவம்பர் 17 அன்று ஒட்டோமான் தலைநகரான கான்ஸ்டான்டிநோபிளைவிட்டு வெளியேறினான்.

**- மு.பாஸ்கரன்**

# பெண்களும் தொழிற்சங்கங்களும்

**பெ**ண்கள் தொழிற்சங்க இயக்கத்திற்குள் தங்களைத் தாங்களே அமைப்பாக்கிக் கொண்டனர். சிலநேரங்களில் அவர்கள் திறன் பெற்ற ஆண் தொழிலாளர்களின் எதிர்ப்பைச் சந்தித்தனர். ஏனென்றால் தொடக்க காலத்தில், சிலநேரங்களில் பெண்களுடைய வேலைகளின் தற்காலிகத் தன்மை காரணமாக, ஆலைகளில் முதலில் தொடங்கப் பெற்ற தொழிற்சங்கங்கள் குறுகிய காலமே இருந்தன, மேலும் உள்ளூர் அளவில் தான் அமைக்கப்பட்டிருந்தன. மேலும் பெண்கள் மட்டுமே செய்யும் வேலைகளில் மட்டுமே இருந்தனர். அதனால் பெண்களுக்கு மட்டுமேயான கிளைகள் மட்டுமே அமைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, ராபர்ட் ஓவனின் மாபெரும் தேசிய பலப்படுத்தப்பட்ட தொழிற்சங்கம் தனிப்பட்ட பெண்கள் பிரிவைக் கொண்டதாக இருந்தது. தொழிலாளர் இயக்கத்தின் தொடக்க நாட்களில், புரட்சிகர சார்டிஸ்ட் இயக்கத்தின் நாட்களில், சலவையகங்களிலும், பின்னல் வேலைகளிலும், புத்தகம் கட்டுதலிலும் வேலை செய்த பெண்கள் தரப்பில் வேலை நிறுத்தம் நடந்தது. 1842-இல் நடந்த சார்டிஸ்டுப் பொது வேலை நிறுத்தத்தில் பெண்கள் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் அவர்களுடைய மனைவியரை வேலைக்கு அனுப்பாமல் இருக்கும் அளவுக்கு வசதி படைத்தவர்களாக இருந்தார்கள், மேலும் அவர்கள் ஆளும்வர்க்கத்தின் கரங்களில் கைப்பாவைகளாக இருந்தனர். ஜெர்மனியில் ஜெர்மன் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பெர்டினான்ட் லாசல்லேவும் அதே நிலைப் பாட்டை எடுத்தார். பெண்கள் வேலைக்குச் செல்வது ஒட்டு மொத்தக் குடும்பத்தின் ஊதியங் களையும் குறையச் செய்தது என்று அவர் வாதிட்டார். 1869லேயே பெண்களின் வேலையை எதிர்த்து ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் பேராயம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இருப்பினும், பெண்களின் உழைப்பு சந்தேகத்துக் கிடமின்றி இன்றுவரை தொடர்ந்து வருகிறது. பெண்களை மலிவான கூலிக்கு உழைக்கச் செய்வதை தடுப்பதற்கு ஒரே வழி தொழிற் சங்கங்கள் அவர்களை அமைப்பாக்குவது தான். இன்னொருபுறம், பெண்களின் வேலைவாய்ப்புக்



களின் மீது கட்டுப்பாடுகளைத் திணித்த சட்டம் ஆண் தொழிலாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டால், அது ஒட்டுமொத்தமாக அந்த வர்க்கத்திற்குப் பயன்படும். நடுத்தர வர்க்கப் பெண்ணியவாதிகள் பலநேரங்களில் இந்தச் சட்டத்தை "சமத்துவத்தின் பெயரால்" எதிர்த்தனர். 1887இல், 14 வயதுக்குட் பட்ட பெண்கள் சங்கிலி மற்றும் அஞ்சல் தொழில்துறையில் வேலை செய்வதைத் தடுக்கும் ஒரு சட்ட முன்வரைவு அறிமுகப்படுத்தப்பட்டது. அது பெண்களுக்கான வாக்குரிமை இயக்கத்தி னரால் தீவிரமாக எதிர்க்கப்பட்டது. இது பெண்கள் வாக்குரிமைக்கான இயக்கத்தினர் தொழிற்சங்க இயக்கத்துடன் கூட்டுச் சேர்ந்து கொள்ளக் காரணமாக இருந்தது என்பது தெளிவு. பெண்களின் உரிமைகளுக்கான போராட்டத்திற்கு எவ்வாறு உறுதியாக ஒரு வர்க்கத்தன்மை இருந்தது என்பதைக் காட்டியது.

ஆண்களின் தொழிற்சங்கங்கள் தோற்றுப்போன போதும், சில பெண் சீர்திருத்தவாதிகள் பெண் களை தொழிற்சங்க இயக்கத்தில் அமைப்பாக்கு வதில் ஒரு உடன்பாடான பாத்திரத்தை மேற்கொண்டனர். அத்தகைய பெண்களில் ஒருவம் எம்மா பேட்டர்சன் ஆவார். 1874இல் அவர் பெண்கள் பாதுகாப்பு மற்றும் எதிர்கால வைப்பீடு சங்கம் ஒன்றை நிறுவி, டியூஸ்பரியில் பெண் நெசவாளர்களின் வேலை நிறுத்தம் ஒன்றை ஒழுங்கமைத்தனர். அந்தச் சங்கம் பெண் தொழி லாளர்கள் தேசியச் சங்கமாக ஆகியது. அது 1896இல் ஒரு மாநாட்டை நடத்தி, தொழிற்சங்கப் பேராயத்தில் செல்வாக்குச் செலுத்தியது. அது உள்ளூரளவில் தொழிலகங்களில் பிரச்சாரம்

செய்தது, சம வேலைக்குச் சம ஊதியம், வேலை அபராதம் விதிப்பதை ஒழிப்பது, குறைந்த கூலி வழங்கப்பட்ட தொழில்களில் ஊதியத்தை ஒழுங்குபடுத்துவது, கூடுதலான தொழிற்சாலை ஆய்வாளர்கள், மகப்பேறுகால சலுகைகள், வாரத்திற்கு 48 மணிநேர வேலை, உழைக்கும் பெண்களுக்குக் கூட்டுறவு வேலைகள் மற்றும் சொத்துரிமையுள்ள பெண்களுக்கு மட்டுமின்றி, அனைத்துப் பெண்களுக்கான வாக்குரிமை ஆகிய கோரிக்கைகளை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தது. தொழிற்சங்க இயக்கத்தில் செயலூக்கத்துடன் இருக்குமாறு பெண்களை அது ஊக்குவித்தது. பெண்களை அமைப்பாக்கியதை பொறியாளர்களின் ஒருங்கிணைந்த சங்கம் போன்ற சங்கங்களை நிராகரித்தன. அச்சங்கம் பெண்கள் வேலைக்குச் செல்வதையே தடைசெய்யுமாறு கோரியது. இருப்பினும், பிரிட்டனில் தொழிற்சங்க இயக்கத்தின் இந்த வரலாற்றுக் காலகட்டம் 1880களின் சூறாவளி நிகழ்ச்சிகளுடன் முடிவுக்கு வந்தது. அந்த நிகழ்ச்சிகள் தொழிலாளர் இயக்கத்தின் தோற்றத்தையே நிரந்தரமாக மாற்றியமைத்தன. நட்புறவுரீதியான சங்கங்கள் போர்குணமிக்க தொழிற்சங்கங்களால் பின்னுக்குத் தள்ளப்பட்டன. இதுவும் பெண் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகளுக்கு முக்கியமான உட்பொருளைக் கொண்டவையாக இருந்தன.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில், பிரிட்டனில் தொழிற்சங்க இயக்கம் கைவினைச் சங்கங்களில் மேலாதிக்கம் செலுத்தியது, அது ஊதியங்களை அதிகரிக்கச் செய்வதற்காக தொழிற்சங்கங்களில் நுழைவதைக் கட்டுப்படுத்தும் மூல உத்தியைக் கொண்டதாக இருந்தது. இது தவிர்க்க முடியாமல் பெண்களை விலக்கி வைத்தது. தொழிற்சங்கங்கள் ஆப்பிள்கார்த், பிராட்ஹர்ஸ்ட் போன்ற மதிப்புமிக்க தொழிற்சங்கத் தலைவர்கள் தலைமையில் இருந்தன. அவர்கள் அரசியல் ரீதியாக லிபரல் கட்சியுடன் இணைந்திருந்தார்கள். அவர்கள் தொழில்துறையில் பெண்களின் ஈடுபாட்டை எதிர்த்தார்கள். அவர்கள் (ஆண்கள்) அவர்களுடைய நாட்டின் மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்தை அவர்கள் கரங்களில் வைத்திருந்தார்கள், உலகின் மாபெரும் வலிமைமிக்க ஆண்களுக்கு எதிராக வாழ்வாதாராத்திற்கான போட்டியில் இழுக்கப்படுவதற்குப் பதிலாக, "ஆண்களாகவும் கணவர்களாகவும், அவர்கள் தங்களுடைய மனைவியர் அவர்களுடைய இடமான வீட்டிலேயே இருந்து வருவதற்கான ஒரு நிலைமையை உருவாக்கத் தங்களுடைய முழுமுயற்சிகளையும் பயன்படுத்துவது அவர்களுடைய கடமையாக இருந்தது" என்று பிராட்ஹர்ஸ்ட் கூறிக்கொண்டார். இது "மேட்டுக்குடித் தொழிலாளர்களின்" கண்ணோட்டம் ஆகும்.

பிரெஞ்சுப் புரட்சியின் போதே பெண்கள் தங்களுக்கும் ஆண்களுக்குச் சமமான சுதந்திரம், சம உரிமை, அரசனது ஆலோசனைக் குழுமங்களில் பிரதிநிதித்துவம் கேட்டு போராட்டத்தில் இறங்கியிருந்தனர். எட்டு மணி நேர வேலை, வேலைக்குக் தகுந்த கூலி, அரசியலில் வாக்குரிமை ஆகியவையும், அவர்களது புரட்சிச் செயல்பாட்டில் பட்டியலிடப்பட்டன.

அப்போது ஆரம்பித்த இந்தப் போராட்டங்கள் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மெல்ல மெல்ல உலகம் முழுவதும் பரவி பெண்களிடையே ஒரு குறிப்பிடத்தக்க அசாதாரண விழிப்புணர்வை ஏற்படுத்த ஆரம்பித்தன. பெண்கள் தங்கள் பலம் என்னவென்று படிப்படியாக உணரத் தொடங்கினர்.

1913ஆம் வருடம் முதல் மார்ச் 8 சர்வதேச மகளிர் ஆண்டாக உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இத்தினத்தை வேண்டுமானால் நாம் எளிமையாக கொண்டாடலாம். ஆனால் இத்தினத்துக்கு காரணமாக போராட்டங்களும் வெற்றிகளும் அவ்வளவு எளிதாகக் கிட்டியதல்ல. ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் இது.

மகளிரைத் தமது தாயாகவும், சகோதரி, மனைவி, மகள், உறவுப்பெண் எனக் கொண்டிருக்கும் ஆண் வழிச் சமுதாய ஆண்கள் தமது வாழ்க்கையில் தவிர்க்க முடியாத அங்கமான இப்பாலினத்தை உரிய முறையில் நடத்துகின்றோமா எனச் சிந்திக்க கிடைக்கும் நாள் மட்டுமல்ல பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கவும், பெண்கள் தொடர்பான மூட நம்பிக்கைகளை அகற்றவும் அவர்களை அதிக பட்ச விழிப்புணர்வு கொண்டவர்களாகவும் செயல்திறன் உரியவர்களாகவும் மாற்றி அமைக்கும் நாள் இது.

- **கோ. பழனியம்மாள்**

# வழக்கிலிருந்து தர்மபுரி மாவட்ட நிர்வாகிகள் விடுவிப்பு

தருமபுரி மாவட்ட ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் மீது புனையப்பட்ட பொய் வழக்கிலிருந்து அனைவரையும் விடுவித்து 28.10.2020 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி கடந்த 2019 ஜனவரி மாதம் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் பங்கேற்ற நிர்வாகிகள் முன்னனி ஊழியர்கள் மீது பொய் வழக்கு புனையப்பட்டு தமிழகம் முழுவதும் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் பங்கேற்ற கீழ்கண்ட தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறை சென்று பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

1. எம்.சுருளிநாதன், மாவட்ட தலைவர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

2. கோ.பழனியம்மாள், மாநில துணை தலைவர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். (தமிழகத்தில் கைது செய்யப்பட்ட ஒரே பெண் தோழர்)

3. ஏ.சேகர், மாவட்ட செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

4 யோகராசு, மாநிலத் துணைத் தலைவர்,தமிழ்நாடு வோளண்மை துறை அமைச்சு பணியாளர் சங்கம்.

5. சி.காவேரி, மாவட்ட செயலாளர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்.

6. கே.குமார், தமிழ்நாடு அரசு கூட்டுறவு துறை ஊழியர் சங்கம்.

7. பி.எம்.கௌரன், மாவட்ட தலைவர், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம்.

8.பொன்.இரத்தினம், முன்னாள் மாவட்ட செயலாளர், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி



ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகள் மீது புனையப்பட்ட வழக்கு எண் 333/2019 தருமபுரி JMC ஒன்றாவது நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

ஜாக்டோ-ஜியோ சார்பாகவும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாகவும், இந்திய தொழிற் சங்க மையத்தின் வழக்கறிஞர் அமர்த்தப்பட்டு வழக்கு நடைபெற்று வந்தது.இருதரப்பு விசாரணைக்கு பின்னர் இவ்வழக்கு பொய் வழக்கு என 28-10-2020 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டு இவ்வழக்கில் இருந்து அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்பதனை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இதே நீதிமன்றத்தில் ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் 40 பேர் மீது பொய்வழக்கு புனையப்பட்டு இருதரப்பு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.விரைவில் தீர்ப்பு வரப்பெறவுள்ளது என்பதனையும் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வழக்கினை நடத்துவது தொடர்பாக அவ்வப்போது தொடர்பு கொண்டு ஆலோசனைகள் வழங்கிய மாநில நிர்வாகிகள் மற்றும் தருமபுரி மாவட்ட CITU நிர்வாகிகள் மற்றும் துறை சங்கத்தோழர்களுக்கும் தருமபுரி மாவட்ட மையத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நம்மால் முடியாதது<br>
வேறுயாராலும் முடியாதது<br>
வேறுயாராலும் முடியாதது<br>
நம்மால் மட்டுமே முடியும்.

❖

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com